# அரையாண்டு

# அரசிறை நிலைமை அறிக்கை

# - 2009 -

நிதி, திட்டமிடல் அமைச்சு
இலங்கை

# அரையாண்டு
# அரசிறை நிலைமை அறிக்கை - 2009

. . .

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்)
சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது

மஹிந்த ராஜபக்ஷ
சனாதிபதியும் நிதி, திட்டமிடல் அமைச்சரும்

## 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் கௌரவ நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்ட அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி நிதி அமைச்சரானவர் வருடத்தில் யூன் மாதத்தின் இறுதித் தினத்தில் அரசிறை நிலைமை அறிக்கையினை பொது மக்களுக்குச் சமர்ப்பிக்கவும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் முன் வைக்கவும் கேட்கப்பட்டுள்ளார்.

இந்த அறிக்கையின் நோக்கம் அரசாங்கத்தின் அரசிறைச் செயலாற்றுகையையும் அரசாங்கத்தின் அரசிறை உபாயத்தினையும் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதாகும்.

அறிக்கையின் உள்ளடக்கமானது 2009 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது அரசாங்கத்தின் வருமானம், செலவினம், காசுப் பாய்ச்சல் செயற்பாடுகள் மற்றும் பெறுகைகளின் செயலாற்றுகையினைக் கொண்டுள்ளது. அத்துடன் பேரண்டப் பொருளாதார செயலாற்றுகை, விலை அபிவிருத்தி, வெளிநாட்டு உதவி, அரசாங்கப் படுகடன் மற்றும் கொடுப்பனவு மீதி அத்துடன் கடன் அபிவிருத்தி என்பவற்றுடன் தொடர்பான கிடைப்பனவிலுள்ள தகவல்களினை அடிப்படையாகக் கொண்டு இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களினை வழங்குகின்றது.

# அத்தியாயம் 1

# அரசிறை அபிவிருத்திகள்

## மேன்நோக்கு

- உலகப் பொருளாதார நெருக்கடியினால் உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகள் தாமதமடைந்து, அரசாங்கத்தின் வருமான சேகரிப்பில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தியது. 2009 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது அரசிறை அபிவிருத்தியானது கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஏறக்குறைய 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பெறுமதி சேர் வரி மற்றும் உற்பத்தித் தீர்வைகள் போன்ற மறைமுக வரிகள் உள்நாட்டு தயாரிப்பு மற்றும் சேவைத் துறைகளினை கடுமையாக பாதித்தது. உயர் வட்டிக் கொடுப்பனவு, அதிகரித்த சம்பளங்கள் மற்றும் ஓய்வூதிய செலவினம், உர மானியக் கொடுப்பனவுகள் மற்றும் மூலதனக் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட அதிக நிதி என்பன காரணமாக செலவினம் 28 சதவீதத்தினால் அதிகரித்தது.
- ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது அரசாங்க முதலீட்டுக்கான மொத்த ஏற்பாடுகளில் 23 சதவீதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலைமை குறைவடைந்து செல்லும் வருமானப் பாய்ச்சலின் பின்னணியில் நோக்கப்பட வேண்டியுள்ளது. மிகக்கடுமையான அரசிறை நிலைமையின் போதும் அரசாங்கம் ரூபா 85 மில்லியனை இக்காலப்பகுதியின் போது மூலதன கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கு முடியுமாக இருந்தது. இத்தொகை கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 14 சதவீத அதிகரிப்பொன்றாகும். 2009 ஆம் ஆண்டுக்கான மொத்த ஒதுக்கீட்டில் மீண்டெழும் செலவினம் 37 சதவீதமாக காணப்படுகின்றது.
- உயர் வட்டிக் கொடுப்பனவுகள், உர மானியம் மற்றும் அதிக சம்பள செலவினம் என்பவற்றுடன் வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.4 சதவீத வருமானப் பற்றாக்குறையினை ஏற்படுத்தியுள்ளது. மொத்தப் பற்றாக்குறையானது ரூபா 199 பில்லியனாக அதிகரித்ததுடன் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதமாகும்.
- உலகப் பொருளாதாரத்தில் பொருளாதார நிதி நெருக்கடி ஏற்பட்ட போதிலும் மூலதனக் கருத்திட்டங்களுக்கான வெளிநாட்டு உதவி இக்காலப் பகுதியில் தொடர்ந்து வழங்கப்பட்டது. 2009 மே மாத இறுதியில் மொத்த வெளிநாட்டு மானியங்களும் கடன்களும் 335 மில்லியன் ஐ.அ.டொலர்களாகும்.

## அட்டவணை 1.1

**வரவு செலவுத் திட்டச் சுருக்கம் (ஜன - ஏப்) - பொருளாதார வகுப்பாக்கம்**

**ரூபா.மில்.**

| | 2008 | 2009 |
|---|---|---|
| **வருமானம்** | **210,427** | **190,138** |
| வரி | 187,584 | 175,308 |
| வரியல்லாதவை | 22,843 | 14,830 |
| **செலவினம்** | **303,847** | **389,788** |
| நடைமுறை | 229,236 | 308,416 |
| பகிரங்க முதலீடு | 78,878 | 85,973 |
| பிற | -4,267 | -4,601 |
| **வருமானக் கணக்கு** | **-18,809** | **-118,278** |
| **பொதுவான பற்றாக்குறை** | **-93,420** | **-199,651** |
| நிதியளிப்பு | 93,420 | 199,651 |
| மானியம் | 3,585 | 3,670 |
| வெளிநாட்டுக் கடன்கள்* | 15,170 | -2,133 |
| உள்ளூர் நிதி ஏற்பாடு | 74,665 | 198,114 |
| வங்கியல்லாதவை | 56,276 | 48,849 |
| வங்கி | 18,389 | 149,265 |
| வருமானம்/ மொ.உ.உ (%) | 4.8 | 3.9 |
| நடைமுறைச் செலவினம்/ மொ.உ.உ (%) | 5.2 | 6.2 |
| பகிரங்க முதலீடு/ மொ.உ.உ (%) | 1.8 | 1.7 |
| வருமானப் பற்றாக்குறை/ மொ.உ.உ (%) | 0.4 | 2.3 |
| பொதுவான வ.செ.தி பற்றாக்குறை / மொ.உ.உ (%) | 2.1 | 4.0 |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

** திறைசேரி முறிகளின் வெளிநாட்டு முதலீடுகள் உள்ளடங்கலாக*

# அரசாங்க வருமானம்

- 2009 ஜனவரி - மே காலப்பகுதியில் அரசாங்க வருமானம் ரூபா 239.6 பில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், இக்காலத்தில் பெறப்பட்ட அரசாங்க வருமானம் 2008 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 8 சதவீத வீழ்ச்சியாகும். பொருளாதாரத்தில் தாமதமான வளர்ச்சி உலகப் பொருளாதார நெருக்கடி நிலைமை என்பனவும் அரசாங்க வருமான சேகரிப்பில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

- தயாரிப்பு மற்றும் சேவைகள் துறையில் சிறியதொரு வளர்ச்சி பதிவாகியுள்ளதுடன் பெறுமதி சேர் வரி உற்பத்தி தீர்வை என்பவற்றில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ள அதே நேரம் இறக்குமதிகள் 30 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக வர்த்தகம் தொடர்பான வரிகள் மிகவும் பாதிப்படைந்துள்ளது. அரசாங்க வருமானத்தில் வீழ்ச்சிப்போக்கினை தவிர்ப்பதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் சிறிதளவு தூரம் ஒத்தாசையாக இருந்தது. செஸ் வரி விகிதத்தினை உயர்த்துதல், எரிவாயு மீதான உற்பத்தித் தீர்வையினை அறிமுகப்படுத்தல் தேசக்கட்டுமான வரியினை அறிமுகப்படுத்தல், புகையிலை மற்றும் மதுபானம் மீதான உற்பத்தித் தீர்வை அளவினை உயர்த்துதல், சில இறக்குமதிகள் மீதான தீர்வைகளை அறிமுகப்படுத்தல் என்பன அரசாங்க வருமான இழப்பினை குறைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட சில நடவடிக்கை களாகும். எவ்வாறாயினும், இந்த நடவடிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட்ட போதும் சர்வதேச சந்தைகளில் விலை வீழ்ச்சி மற்றும் வரி வருமான குறைவு உள்நாட்டு நுகர்வாளர்களுக்கு விலை குறைப்பின் நன்மைகளை வழங்குதல் என்பனவும் கவனத்தில் கொள்ளப்பட்டது.

**அட்டவணை 1.2**

**வருமான செயலாற்றுகை - (ஜனவரி - மே) ரூபா.மில்.**

| | 2008 | 2009 | வளர்ச்சி % |
|---|---|---|---|
| **வரி வருமானம்** | **237,070** | **221,293** | **-6.7** |
| வருமான வரி | 48,998 | 56,307 | 14.9 |
| பெ.சே.வரி | 86,904 | 66,161 | -24.3 |
| உற்பத்தி தீர்வை | 41,503 | 32,453 | -21.8 |
| செஸ் வரி | 9,317 | 10,352 | 11.1 |
| து.மு.வி.நிலைய அபிவிருத்தி அறவீடு | 12,996 | 11,676 | -10.2 |
| இறக்குமதித் தீர்வை | 22,945 | 24,658 | 7.5 |
| பிற | 14,408 | 19,686* | 39.5 |
| **வரியல்லாத வருமானம்** | **25,438** | **18,337** | **-27.9** |
| **மொத்த வருமானம்** | **262,508** | **239,630** | **-8.7** |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

* தேச கட்டுமான வரியாக சேகரிக்கப்பட்ட ரூபா 4,133 மில்லியன் உள்ளடங்களாக

**வரைபு 1.1**



## வருமான வரி

கம்பனி இலாப வரி, தனியாள் வருமான வரி, வட்டி வருமானம் மீதான வரி, பொருளாதார சேவைக்கட்டணம் என்பவற்றிலிருந்தான மொத்த வருமானம் ரூபா 56,030 மில்லியனை பதிவாக்கியிருந்ததுடன் 2008 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2009 இன் முதல் ஐந்து மாதங்களின் போது 14 சதவீதமாக அதிகரித்தது.

வரி அடிப்படையினை விரிவாக்குவதற்காக கடந்த சில ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் வருமான வரி வருமானத்தில் சாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியது. அத்துடன் நாட்டின் முக்கிய துறைகளுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்புகள் மற்றும் சலுகைகள் என்பனவும் 2009 வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சில முன்மொழிவுகளால் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் சில:

- புதிய அல்லது தரமுயர்த்தப்பட்ட திரையரங்குகளிலிருந்து கிடைக்கும் வருமானம் 5 - 7 வருட காலப்பகுதியொன்றுக்கு வரி விடுமுறை விரிவாக்கப்பட்டது.
- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா இயக்குனர்கள் மற்றும் சுற்றுலா முகவர்களின் அல்லது ஹோட்டல் நடாத்துனர்கள் மற்றும் ஏற்றுமதிக்காக எவரேனும் ஏற்றுமதியாளருக்கு தயாரிக்கப்பட்ட ஏதேனும் பொருட்களின் ஏற்றுமதி அல்லது விநியோகம் என்பவற்றின் பெறுகைகள் ஒரு வருட காலப்பகுதிக்கு பொருளாதார சேவைக்கட்டணத்திலிருந்து விலக்களிப்பு செய்யப்படும்.
- ஒரு கி.கி இற்கு மேற்படாத நிறையுடைய கருப்புத் தேயிலை பக்கெற்றுகளின் ஏற்றுமதிக்காக சலுகை வருமான வரி விகிதம் 15 சதவீதமாகும்.
- உழைக்கும் போது செலுத்தும் வரி மட்டங்களை விரிவுபடுத்துதல்.

## பெறுமதி சேர் வரி

2009 மே மாதம் வரைக்கும் பெ.சே.வரி வருமானம் ரூபா 66,161 மில்லியனாகும். 2008 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் கிடைத்த வருமானம் ரூபா 86,904 மில்லியனாகும். மசகெண்ணெய் அல்லாத இறக்குமதிகளில் 30 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன், விசேடமாக சேவை மற்றும் தயாரிப்பு துறைகளில் உள்நாட்டு பொருளாதாரம் தாமத வளர்ச்சியினால் பெறுமதி சேர் வரி சேகரிப்பு கடுமையாக பாதிக்கப்பட்டது. மேலும் பெற்றோலிய உற்பத்திகளில் குறைந்த விலைகள், பெ.சே.வரி விகிதத்தினை 15 இலிருந்து 12 சதவீதமாக குறைத்தல் மற்றும் சிகரெட் விற்பனைகள் மற்றும் மதுபான உற்பத்திகள் என்பவற்றிலும் குறைவான வளர்ச்சி காணப்பட்டமை பெ.சே.வரி சேகரிப்பில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியது.

அட்டவணை 1.3

பெறுமதி சேர் வரி செயலாற்றுகை (ஜனவரி - மே)

ரூபா.மில்

| வரி அடிப்படை | 2008 | 2009 | வளர்ச்சி % |
|---|---|---|---|
| உள்நாட்டு | 47,819 | 44,801 | -6.3 |
| இறக்குமதி | 42,601 | 24,111 | -43.4 |
| **மொத்த வருமானம்** | **90,420** | 68,912 | -23.8 |
| மீள் கொடுப்பனவுகள் | 3,516 | 2,751 | -21.8 |
| **தேறிய வருமானம்** | **86,904** | 66,161 | -24.3 |
| மொத்த வருமானத்தில் மீள்கொடுப்பனவு % | 3.9 | 3.9 | |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

2008 இன் இறுதிப் பகுதியிலும் 2009 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்தும் பயன்வலுப்பெறும் வகையில் ஏற்கனவே வழங்கப்பட்ட விலக்களிப்புகளுக்கு மேலதிகமாக பல்வேறுபட்ட அபிவிருத்தி தொடர்பான பெறுமதி சேர் வரி விலக்களிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பெ.சே.வரி விலக்களிப்புகள்**

- மாற்று சக்தி மூலமாக சூரிய மின் உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கு சூரிய சக்தி உபகரணங்கள் இறக்குமதி மற்றும் விநியோகம்.
- உள்நாட்டு கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தேயிலை இயந்திரங்கள் மற்றும் சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் மென்துணிகள்.
- கைவினைத் தொழில்துறையில் சுயவேலைவாய்ப்பினை ஊக்குவிப்பதற்கு தேசிய கைவினை பேரவையினால் பித்தளைப் பொருட்களை தயாரிப்பதற்காக பித்தளை தகடுகள், ஆணிகள், வர்ண சாயங்கள் இறக்குமதி.
- உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களின் செலவினைக் குறைப்பதற்கு குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்கும் நோக்கில் மின்சார உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் இரசாயன நப்தா இறக்குமதி.
- "கம நகும", "மக நகும", சமுர்த்தி மற்றும் வாழ்வாதார மற்றும் கிராமிய பிரதேசங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வடிவமைக்கப்பட்ட சமுதாய நீர்ப்பாசன கருத்திட்டங்களின் நிர்மாணப்பணி.

**உற்பத்தி வரிகள்**

- மதுபானம், சிகரெட், பெற்றோலியம் உற்பத்திகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள் மீதான உற்பத்தி வரிகளின் வருமானம் 2008 ஜனவரி - மே மாதத்தில் ரூபா 41,503 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009 இன் முதல் ஐந்து மாதங்களின் போது ரூபா 32,454 மில்லியன் பெறப்பட்டது.

- மதுபானம் மீதான உற்பத்தி வரி ரூபா 12,007 மில்லியனை பதிவாக்கியுள்ளதுடன் குறித்த காலப்பகுதியின் போது 5 சதவீத வளர்ச்சியினை பதிவாக்கியது. இது 2009 மார்ச்சில் உற்பத்திப் பொருட்கள் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும், தீர்வை விகிதங்களை உயர்த்தியதன் மூலம் ஏற்பட்ட பிரதான நன்மையாகும். குறித்த காலப்பகுதியில் சிகரெட் விற்பனைகளும் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக வருமான சேகரிப்புகள் பாதிக்கப்பட்டன. அரசாங்க ஊழியர்களுக்கு மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்காக வழங்கப்பட்ட சலுகை நீக்கப்பட்ட போதிலும் வீழ்ச்சி மேலும் காணப்பட்டது. 2008 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வருமான சேகரிப்பு ஏறக்குறைய 73 சதவீதத்தினால் குறைவடைந்தது. இதுவும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைத் திட்டத்தின் பாதிப்பாகும். அத்துடன் நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தமை வருமான சேகரிப்பில் மோசமான பாதிப்பினை ஏற்படுத்தியது. 2009 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து எரிவாயு மீது விதிக்கப்பட்ட உற்பத்தி தீர்வை, வரி சேகரிப்பில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சியினை ஓரளவு தவிர்ப்பதற்கு முடியுமாகவிருந்தது.

**அட்டவணை 1.4**

**உற்பத்தி வரி செயலாற்றுகை - (ஜனவரி - மே)**

**ரூபா.மில்.**

| விடயம் | 2008 | 2009 | வளர்ச்சி % |
|---|---|---|---|
| மதுபானம் | 11,439 | 12,006 | 5.0 |
| சிகரெட்டுகள் | 14,322 | 13,360 | -6.7 |
| பெற்றோலியம் மற்றும் மோட்டார் வாகனங்கள் | 12,605 | 5,438 | -56.9 |
| பிற | 3,137 | 1,649 | -47.4 |
| **மொத்தம்** | **41,503** | **32,453** | **-21.8** |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**உற்பத்தி தீர்வை விகித மாற்றங்கள்**

- 2009 மார்ச்சிலிருந்து சிகரெட்டுக்கள் மற்றும் மதுபானம் மீதான உற்பத்தித் தீர்வை திருத்தப்பட்டது.
- 2009 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து கி.கி ஒன்று ரூபா 8 ஆக உற்பத்தி தீர்வை திரவ பெற்றோலிய வாயு மீது விதிக்கப்பட்டதுடன் 2009 மார்ச் 01 ஆம் திகதியிலிருந்து கி.கி ஒன்று ரூபா 27.50 ஆக மேலும் அதிகரிக்கப்பட்டது. இது 2009 மே 01 ஆம் திகதியிலிருந்து கி.கி ஒன்று ரூபா 26.50 ஆக குறைக்கப்பட்டது.

**அட்டவணை 1.5**

**சிகரெட்டுக்கள் மீதான உற்பத்தித் தீர்வை விகித திருத்தம்**

**1,000 சிகரெட்டுக்களுக்கு**

| சிகரெட்டுகளின் நீளம் | 2008 மார்ச் | 2008 நவம்பர் | 2009 ஜனவரி | 2009 மார்ச் | அதிகரித்தது (%) |
|---|---|---|---|---|---|
| நீ > 84 மி.மீ | 9,870 | 10,870 | 11,170 | 12,170 | 23.3 |
| 72 மி.மீ < நீ < 84 மி.மீ | 8,850 | 9,380 | 9,681 | 10,715 | 21.1 |
| 67 மி.மீ < நீ < 72 மி.மீ | 7,219 | 7,745 | 7,991 | 8,485 | 17.5 |
| 60 மிமீ < நீ < 77 மி.மீ | 4,520 | 5,048 | 5,215 | 5,706 | 26.2 |
| நீ < 60 மி.மீ | 2,215 | 2,215 | 2,289 | 2,289 | 3.3 |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

- வர்ணப்பூச்சுக்கள் உற்பத்தி தீர்வை கி.கி ஒன்று ரூபா 16 ஆக திருத்தப்பட்டதுடன் லீட்டரொன்றுக்கான தீர்வை ரூபா 6 ஆக 2008 நவம்பர் 07 ஆம் திகதியிலிருந்து முன்கலவை குடிபானங்கள் மீது விதிக்கப்பட்டது.

## இறக்குமதித் தீர்வைகள்

- 2009 இன் முதல் ஐந்து மாதங்களின் இறக்குமதித் தீர்வை வருமானம் 8 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் ரூபா 24,658 மில்லியனை பெற்றுத் தந்தது. குறிப்பிட்ட தீர்வைகளை விதித்தல் மற்றும் தற்பொழுதிருக்கும் குறித்த விகிதங்களை உயர்த்துதல் மற்றும் பெற்றோலிய இறக்குமதிகள் மீது குறித்த விகிதங்களை விதித்தல் என்பன வருமான சேகரிப்பில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்திய அதே நேரம், மோட்டார் வாகனங்களின் இறக்குமதி வீழ்ச்சி மற்றும் பிற நுகர்வுப் பொருட்கள் என்பன வருமான வளர்ச்சியினை மட்டுப்படுத்தியது.
- சர்வதேச சந்தையில் விலை அழுத்தத்தினை குறைப்பதற்கு வகையில் உள்ளூர் விலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தாத வகையில் விசேட நுகர்வுப்பொருள் அறவீட்டினை அரசாங்கம் அதிகரிக்க முடியுமாக இருந்தது. இது ஆரம்பத்தில் ஏற்புடையதான வித்தியாசமான வரிகளின் கீழ் விதிக்கப்பட்ட வரி விகிதங் களினைவிட மிகவும் குறைந்த தனியானதொரு வரி விகிதத்தின் மூலம் பெறப்பட்ட வருமானத்திலிருந்து வருமான இழப்புக்கள் ஈடுசெய்யப்படுவதற்கு ஓரளவு முடியுமாக இருந்தது. 2009 ஜனவரி - மே காலப்பகுதியில் ரூபா 9,000 மில்லியன் விசேட நுகர்வுப்பொருள் அறவீட்டு வருமானமாகப் பெறப்பட்டது.

**இறக்குமதித் தீர்வை மாற்றங்கள்**

- 2008 நவம்பர் 07 ஆம் திகதியிலிருந்து பெற்றோல் லீட்டரொன்று ரூபா 35 ஆகவும் டீசல் லீட்டரொன்று ரூபா 15 ஆகவும் குறிப்பீடு செய்யப்பட்ட விகிதம் விதிக்கப்பட்டது. 2009 ஏப்பரல் மாதத்திலிருந்து லீட்டரொன்றுக்கு ரூபா 10 என்ற விலக்களிப்பு அமுல்படுத்தப்பட்டது.
- 2009 பெப்ரவரியிலிருந்து கோதுமை மா மீதான கி.கி ஒன்றுக்கு ரூபா 10 என்ற குறிப்பீடு செய்யப்பட்ட விகிதம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2009 ஏப்ரலிருந்து கி.கி ஒன்று ரூபா 40 இலிருந்து கி.கி ரூபா 60 ஆக எடிப்பில் எண்ணெய் மீதான குறிப்பீட்டு விகிதம் அதிகரிக்கப்பட்டது.
- ஓடு மீதான குறிப்பீட்டு விகிதங்கள் 2009 மார்ச்சிலிருந்து சதுர மீற்றரொன்று 100 ரூபாவிலிருந்து சதுர மீற்றரொன்று 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.
- 2009 மார்ச் மாதத்திலிருந்து பால் மா மீதான குறிப்பீடு செய்யப்பட்ட விகிதம் கி.கி ஒன்று ரூபா 125 ஆக விதிக்கப்பட்டதுடன் ஆரம்பத்தில் ஏற்புடையதான ஒரே வழிக்கு பதிலாக சாதாரண வரிக்கட்டமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- துவிச்சக்கர வண்டிகள் மீதான குறிப்பீடு செய்யப்பட்ட விகிதம் சைக்கிள் ஒன்றுக்கு ரூபா 750 இலிருந்து ரூபா 1,500 ஆக உயர்த்தப்பட்டது.

**அட்டவணை 1.6**

**விசேட நுகர்வுபொருள் அறவீட்டு தீர்வை மாற்றங்கள் (2009 ஜன - மே)**

(ரூபா/கி.கி)

| விடயம் | ஏற்புடைய தீர்வை | | |
|---|---|---|---|
| | **06.11.2008** | **03.02.2009** | **30.03.2009** |
| பால் மா | 15 | 35* | - |
| உருளைக்கிழங்கு | 20 | 25 | 25 |
| பெரிய வெங்காயம் | 20 | 25 | 25 |
| பயறு | 15 | 25 | 35 |
| கடலை | 15 | 25 | 30 |
| பாசிப்பயறு | 13 | 15 | 15 |
| பருப்பு | 6 | 6 | 20 |
| மிளகாய் | 30 | 40 | 40 |
| ரின் மீன் | 25 | 40 | 85 |
| வெள்ளைச் சீனி | 16 | 16 | 16 |
| நெத்தலி | 20 | 35 | 30 |

** இந்த விகிதம் 2009.02.26 ஆம் திகதிய 1590/17 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் கி.கி ஒன்று ரூபா 55 ஆக உயர்த்தப்பட்டது.*

*மூலம் : வர்த்தகத் தீர்வை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு திணைக்களம்*

## பிற வரிகள்

- துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு வருமானம் ரூபா 11,676 மில்லியனாகும். மருந்துப் பொருட்கள் தயாரிப்புக்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள், சில இயந்திரங்கள் 2 சதவீத குறைவான விகிதத்தில் விதிக்கப்பட்டதுடன் பொதுவான விகிதம் 2009 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து 5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.
- செஸ் வருமானம் ரூபா 10,352 மில்லியனை உழைத்ததுடன், 2008 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 11 சதவவீத அதிகரிப்பொன்றினை காட்டியது. பிரதானமாக தற்பொழுதிருக்கும் செஸ் விகிதங்கள் உயர்த்தப் பட்டதுடன் சில பொருட்கள் மீதான செஸ் விதிப்பனவும் இடம்பெற்றதனால் இந்த நன்மை பெறப்பட்டது.
- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தேசகட்டுமாண வரி 2009 இன் முதல் ஐந்து மாதங்களில் ரூபா 18,565 மில்லியனை பெற்றுக் கொடுத்தது. 2009 மே 01 ஆம் திகதியிலிருந்து இந்த விகிதம் 3 சதவீதமாக மேலும் திருத்தப்பட்டது.

## வரியல்லாத வருமானம்

2009 ஜனவரி - மே மாதங்களின் போது சேகரிக்கப்பட்ட வரியல்லாத வருமானம் 2008 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 25,438 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 18,665 ஆக இருந்தது. 2008 இல் மத்திய வங்கி இலாப மாற்றல்களான ரூபா 8,000 மில்லியன் உள்ளடங்கலான தொகை 2009 இல் மாற்றல்கள் இடம் பெறவில்லை.

## அட்டவணை - 1.7

## நிதி மற்றும் வருமானம் தொடர்பான சட்டவாக்கங்கள் (2008 நவ - 2009 யூன்)

| | |
|---|---|
| 2009 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டம் | சில தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங் களுக்கு வருமான வரி விலக்களிப்பு வழங்குதலும் 2009 வ.செ. திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு வரிச்சலுகைகளை வழங்குதலும். |
| 2009 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டம் | பெ.சே. வரிக்கான பதிவுகளுக்காக விலக்களிப்புகளையும் வரையறைகளையும் வழங்குதல். அத்துடன் 2009 வ.செ. திட்டத்தில் முன்மொழயப்பட்டவாறு விகித குறைப்புகள். |
| 2009 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பொருளாதார சேவைக்கட்டண (திருத்தச்) சட்டம் | வ.செ. திட்ட முன்மொழிவுகளை ஒருங்கிணைத்தலும் ஊக்குவிப்பு பொதிக்கான முன்மொழிவுகள். |
| 2009 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம் | துறைமுக விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டினை 3 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக அதிகரித்தல். |
| 2009 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம் | தனியாள் வருமான வரி மீதான சமூகப் பொறுப்பு அறவீட்டு கடப்பாடுகளை நீக்குதலும் கம்பனி வருமான வரிக்கு மாத்திரம் சமூகப்பொறுப்பு அறவீட்டினை மட்டுப்படுத்தல். |
| 2009 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம் | தற்பொழுது கம்பியல்லாத மற்றும் கையடக்க தொலைபேசிகளுக்கு மாத்திரம் ஏற்புடைத்தான 10 சதவீத தொலைபேசி அறவீட்டினை நிலையான தொலைபேசி இணைப்புகளுக்கும் விரிவாக்குதல். |
| 2009 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம் | ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தம் கொடுநரினால் கொடுப்பனவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் நிர்மாண கைத்தொழில் உத்தரவாத அறவீட்டினை கழப்பனவு செய்வதற்கான ஏற்பாடுகள். |
| 2009 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பற்று வரி (திருத்தச்) சட்டம் | பற்று வரியினை சேகரித்தல் தொடர்பான ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கான திருத்தங்கள். |
| 2009 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் | உற்பத்தி வரியினை அடிப்படையொன்றாக கணப்பீடு செய்யும் சந்தர்ப்பத்தில் அனைத்து வரிகளுக்கும் பதிலாக தெரிவு செய்யப்பட்ட வரிகளை பயன்படுத்துவதற்கான திருத்தம். |
| 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேசக் கட்டுமாண வரிச் சட்டம் | 2009 வ.செ. திட்டத்தின் முன்மொழிவுகளை செயற்படுத்துதல். |

## அட்டவணை - 1.8

| அரசிறை நடவடிக்கைகள் - 2009 | |
|---|---|
| **இறக்குமதித் தீர்வை** | |
| 07.11.2008 | 2008.11.06 ஆம் திகதிய 1574/13 ஆம் இலக்க 01/2008 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்பு கட்டளைச் சட்ட வர்த்தமானி - வரவு செலவுத்திட்ட முன்மொழிவினை அடிப்படையாகக் கொண்ட சுங்கத் தீர்வை மாற்றங்கள். |
| 04.02.2009 | 2009.02.03 ஆம் திகதிய 1587/09 ஆம் இலக்க 01/2009 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்பு கட்டளைச் சட்ட வர்த்தமானி - கோதுமைத் தானியத்துக்கான குறிப்பீடு செய்யப்பட்ட கட்டணத்தை கி.கி ஒன்று ரூபா 10 ஆக விதித்தல். |
| 01.04.2009 | 2009.03.30 ஆம் திகதிய 1595/11 ஆம் இலக்க 02/2009 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்பு கட்டளைச் சட்ட வர்த்தமானி - பால் மா, ஓடு, துவிச்சக்கர வண்டிகள், குளிரூட்டிகள் என்பவற்றிற்கான தீர்வை விகிதம் அதிகரிக்கப்படுதலும் புதிய இயைபு முறைக் குறியீடுகள் அறிமுகப்படுதலும். |
| 07.04.2009 | 2009.04.06 ஆம் திகதிய 1596/7 ஆம் இலக்க 03/2009 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்பு கட்டளைச் சட்ட வர்த்தமானி - பாம் எண்ணெய் மீதான வரியினை அதிகரித்தல். |
| **உற்பத்தித் தீர்வை** | |
| 07.11.2008 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு (2008.11.06 திகதிய 1574/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - 2009 வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டவாறான விகித திருத்தங்கள். |
| 07.11.2008 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ ஆம் பிரிவு (2008.11.06 திகதிய 1574/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - உற்பத்தி வரி விதிக்கத்தக்க குறிப்பீடு செய்யப்பட்ட பொருட்களுக்கான விலக்களிப்புகள். |
| 01.01.2009 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு (2008.12.31 திகதிய 1582/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - சிகரெட்டுக்கள் மீதான தீர்வை திருத்தங்கள். |
| 01.01.2009 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு (2008.12.31 திகதிய 1582/12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - பெற்றோலிய வாயு மீதான உற்பத்தித் தீர்வையினை விதித்தல். |
| 28.02.2009 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு (2009.02.27 திகதிய 1590/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - பெற்றோலிய |

வாயு மீதான உற்பத்தித் தீர்வையினை திருத்துதல்.

05.03.2009 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ ஆம் பிரிவு (2009.03.04 திகதிய 1591/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - உற்பத்தித் தீர்வை விதிக்கக் கூடிய பொருட்களுக்கு விலக்களிப்பு

27.03.2009 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு (2009.03.26 திகதிய 1594/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - சிகரெட்டுக்கள் மீதான தீர்வையினை திருத்துதல்.

01.05.2009 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு (2009.04.30 திகதிய 1599/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - பெற்றோலிய வாயு மீதான உற்பத்தி தீர்வையினை திருத்துதல்.

**விசேட நுகர்வுப்பொருள் அறவீடு**

07.11.2008 அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அறவீடு (2008.11.06 ஆம் திகதிய 1574/11 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கமைவாக விசேட நுகர்வுப் பொருள் அறவீட்டினை திருத்துதல்.

21.01.2009 அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அறவீடு (2009.01.20 ஆம் திகதிய 1585/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - பால் மா மீதான விசேட நுகர்வுப் பொருள் அறவீட்டினை அதிகரித்தல்.

04.02.2009 அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அறவீடு (2009.02.03 ஆம் திகதிய 1587/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - பால் மா தவிர பிற விசேட நுகர்வுப் பொருட்கள் மீதான வரி விகித திருத்தம்.

27.02.2009 அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அறவீடு (2009.02.26 ஆம் திகதிய 1590/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - பால் மா மீதான விசேட நுகர்வுப் பொருள் விகிதத்தினை திருத்துதல்.

01.04.2009 அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அறவீடு (2009.03.30 ஆம் திகதிய 1595/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - பால் மாவிற்கான விசேட நுகர்வுப் பொருள் அறவீட்டினை நீக்குதல்.

01.04.2009 அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அறவீடு (2009.03.30 ஆம் திகதிய 1595/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - பால் மா தவிர பிற விசேட நுகர்வுப் பொருட்கள் மீதான வரி விகித திருத்தம்.

**பெறுமதி சேர் வரி**

01.01.2009 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி வரிச்சட்டத்தின் 2 அ பிரிவு (2009.01.01ஆம் திகதிய 1582/35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - நிலையான பெறுமதி சேர் வரி விகிதத்தினை 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக குறைத்தல்.

**செஸ்**

| | |
|---|---|
| 07.11.2008 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு (2008.11.06 ஆம் திகதிய 1574/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - செஸ் வரி விகிதத்தினை அதிகரித்தல். |
| 02.02.2009 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு (2009.01.30 ஆம் திகதிய 1586/26 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - |
| 21.02.2009 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு (2009.02.20 ஆம் திகதிய 1589/31 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - பாதணிகளின் உதிரிப்பாகங்களுக்கான விகித திருத்தங்கள். |
| 06.03.2009 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு (2009.03.05 ஆம் திகதிய 1591/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - சோளம் தானியத்தின் மீதான செஸ் வரியினை விதித்தல். |
| 02.04.2009 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு (2009.04.02 ஆம் திகதிய 1595/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - செஸ் வரி விகிதங்களின் திருத்தம். |

**வருமான வரி**

| | |
|---|---|
| 28.04.2009 | 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 217 ஆம் பிரிவு (2009.04.28 ஆம் திகதிய 1599/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) |

**பிற வரி நடவடிக்கைகள்**

| | |
|---|---|
| 01.01.2009 | 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் (2009.01.01 ஆம் திகதிய 1582/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - குறிப்பீடு செய்யப்பட்ட பொருட்களுக்கான சலுகை விகிதங்கள் மற்றும் விலக்களிப்புகள். |

- 2009 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான அரசாங்க செலவினம் ரூபா 389,788 மில்லியனாக இருந்தது. இவற்றுள் மீண்டெழும் செலவினம் ரூபா 308,416 மில்லியனாகும். அத்துடன் மூலதனச் செலவினம் ரூபா 81,372 மில்லியனாக இருந்தது. 2008 இன் இறுதிப் பகுதியில் நிலவிய உயர்ந்த வட்டி விகிதங்கள் வட்டிச் செலவினத்தில் அதிக தொகையினை இழப்பதற்கு காரணமாகியது. வெளிநாட்டு மூலதனச் சந்தையில் பெறுவதற்கு பதிலாக உள்நாட்டு சந்தையில் பெறப்பட்டதன் காரணமாக மீண்டெழும் செலவினத்தில் அதிகூடிய அழுத்தம் ஏற்பட்டது. அத்துடன் அதிகரித்த சம்பளம் மற்றும் ஓய்வூதிய செலவினங்கள், உரங்களுக்கான கொடுப்பனவு களில் அதிகமான முதலீடு என்பனவும் மீண்டெழும் செலவினத்தில் மோசமான பாதிப்பினை ஏற்படுத்தியது.

- 2009 இன் முதல் நான்கு மாதங்களின் போது அரசாங்க முதலீடு ரூபா 85 பில்லியனாக காணப்பட்டது. மின் உற்பத்தி, துறைமுகங்கள், பாதைகள் மற்றும் நீர்ப்பாசனம் போன்ற கருத்திட்டங்களில் பிரதான அபிவிருத்திகள் தொடர்ந்த அதே நேரம் கிராமிய அபிவிருத்தி முன்னெடுப்புகளும் அதிகரித்த வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது.

## அட்டவணை 1.9

### அரசாங்க செலவின செயலாற்றுகை (ஜனவரி - ஏப்ரல்)

ரூபா.மில்.

| | 2008 | 2009 (இடை) |
|---|---|---|
| **நடைமுறைச் செலவினம்** | 229,236 | 308,416 |
| சம்பளங்களும் கூலிகளும் | 74,749 | 86,681 |
| வட்டி | 71,437 | 108,341 |
| சமுர்த்தி | 3,468 | 3,719 |
| உர மானியம் | 11,260 | 17,428 |
| ஓய்வூதியம் | 25,001 | 27,233 |
| ஏனைய செலவினங்கள் | 43,321 | 65,014 |
| **அரசாங்க முதலீடு** | 78,878 | 85,973 |

*மூலம் : தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்*

## சம்பள மற்றும் ஓய்வூதியச் செலவினங்கள்

- அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளங்கள் மீதான செலவினம் ரூபா 86,681 மில்லியனாக அதிகரித்ததுடன் கடந்த வருடத்தில் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 16 சதவீத அதிகரிப்பொன்றாகும். மாதமொன்றிற்கு ஊழியரொருவருக்கான வாழக்கைச் செலவு கொடுப்பனவு 4,500 ரூபாவாக அதிகரித்ததுடன் 2008 ஆம் ஆண்டின் போது பாதுகாப்பு சேவைகளுக்காக புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் விளைவு என்பன சம்பள செலவினத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தியது.

- மொத்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ரூபா 27,233 மில்லியனாக அதிகரித்ததுடன் 17 சதவீத அதிகரிப்பொன்றினை பதிவாக்கியுள்ளது. 2007 இல் ஏறக்குறைய 12,000 பேர் ஓய்வூதியம் பெற்றதுடன் 2009 இன் முதல் நான்கு மாதங்கள் வரை மேலும் 4,000 பேர் ஓய்வூதியம் பெற்றதன் விளைவாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டது. குறித்த இக்காலப்பகுதியில் ஓய்வூதியம் பெறுநர் ஒருவர் ரூபா 2,000 இனை மாதமொன்றிற்கு வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக பெற்றுக் கொள்வதுடன் இது தொடர்பான கொடுப்பனவுகள் மாதமொன்றிற்கு ரூபா 1,250 ஆக கடந்த வருடத்தில் காணப்பட்டது.

## வட்டிச் செலவினம்

- வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூபா 108,341 மில்லியனாகும். இது கடந்த காலத்தினை விட 52 சதவீதமான அதிகரிப்பொன்றினை பதிவாக்கியுள்ளது. எதிர்பார்த்த வெளிநாட்டு மூலதனச் சந்தை பெறுகைகள் இன்மையினால் வருடத்தின் இறுதிப் பகுதியில் உள்நாட்டுச் சந்தையிலிருந்து குறுகிய கால அடிப்படையில் அதிகமாக பெறுகைகள் இடம்பெற்றிருப்பதும் இக்காலப் பகுதியில் வட்டி மீதான செலவினத்தினை அதிகரிக்கச் செய்தது. அத்துடன் உள்நாட்டு சந்தையிலிருந்து பெறப்பட்ட அதிக பெறுகை காரணமாக இழக்கப்பட்ட வருமான வீழ்ச்சி மூலதன மற்றும் பிற செலவினங்களுக்கு நிதியளிக்கப்பட்டது. 2008 டிசம்பரில் நிலவிய விகிதங்களிலிருந்து 2009 மே வரைக்குமான அடிப்படை புள்ளியாக ஏறக்குறைய 520 இனால் திறைசேரி உண்டியல்களுக்கான வட்டி குறைக்கப்பட்டது. ஓர் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாகும். இது வருடத்தின் இறுதிப் பகுதியில் வட்டிச் செலவினத்தின் மீதான சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும்.

**அட்டவணை 1.10**

**உற்பத்தி விகிதங்களின் தன்மை (%) - 2009**

| வருடம் | திறைசேரி உண்டியல்கள் | | | திறைசேரி முறிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **91** நாட்கள் | **182** நாட்கள் | **364** நாட்கள் | **2** வருடம் | **3** வருடம் | **4** வருடம் | **5** வருடம் |
| 2008 மே | 17.14 | 18.50 | 18.65 | 17.92 | 17.00 | - | 15.55 |
| 2008 டிசம் | 17.33 | 18.57 | 19.12 | 20.53 | 20.34 | 19.60 | - |
| 2009 ஜன | 15.94 | 16.77 | 15.76 | 18.34 | 18.25 | 18.10 | - |
| 2009 பெப் | 15.76 | 16.93 | 17.73 | 18.07 | 18.08 | 18.03 | - |
| 2009 மார்ச் | 14.62 | 16.16 | 16.63 | 16.92 | 16.99 | 16.91 | - |
| 2009 ஏப் | 13.75 | 15.32 | 15.74 | 16.78 | 16.99 | 16.86 | - |
| 2009 மே | 12.13 | 13.28 | 13.58 | 13.32 | 13.73 | 13.63 | - |
| **மாற்றம் டிசம்-2008- மே-2009** | **(30.01)** | **(28.49)** | **(28.97)** | **(35.12)** | **(32.50)** | **(30.46)** | **-** |

*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

**பாதிக்கப்பட்ட குழுக்கள் மீதான நலன்புரி கொடுப்பனவுகளும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பும்**

- நலன்புரிக் கொடுப்பனவுகள் மற்றும் மானியங்கள் மீதான மொத்தச் செலவினம் 2008 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 26,813 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009 மே வரைக்கும் ரூபா 30,215 மில்லியனாகும்.
- சமூகத்தில் வறுமைப்பட்ட குழுக்கள், இடம் பெயந்தர்வர்கள், அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குழுக்களுக்கான ஒத்துழைப்பு களை வழங்குவதற்கான நலன்புரி உதவிகள் 2009 இல் ரூபா 10,246 மில்லியனாக இருந்தது.
- தாய் மற்றும் சிறுவர் சுகாதார பராமரிப்பினை மேம்படுத்தும் நோக்கத்துடன் போஷாக்கு நிகழ்ச்சித் திட்டம் அதிகரித்த செலவில் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றது. —போஷண மல்ல" நிகழ்ச்சித்திட்டம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் போஷாக்கு உணவு வழங்குவதுடன் 2009 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் பாடசாலை மாணவர்களுக்கான போஷாக்கு உணவுக்காக ரூபா 586 மில்லியன் பயன்படுத்தப்பட்ட அதே வேளை மொத்தச் செலவினம் 183 மில்லியனாகும். குழந்தை பால் உணவு மானியம் மற்றும் திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம் என்ற வகையில் பிற போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் ரூபா 431 மில்லியன் செலவில் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டது.

- பாடசாலை பிள்ளைகளின் நன்மைக்காக இலவச பாடசாலை பாடப்புத்தகங்கள், சீருடைகள், பாடசாலை பருவச்சீட்டுக்கள் மற்றும் இலவச அறநெறி பாடப்புத்தகங்கள் என்பவற்றை இலவசமாக வழங்குவதற்கு செயற்படுத்தப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினம் ரூபா 1,280 மில்லியனாகும்.

**அட்டவணை 1.11**

**நலன்புரிக் கொடுப்பனவுகளும் உதவுதொகைளும் (ஜன - மே)**

ரூபா.மில்.

| விடயம் | 2008 | 2009 |
|---|---|---|
| **சிறுவர்** | **2,448** | **2,480** |
| குழந்தை பால் மா உதவுதொகை | 20 | 19 |
| போஷண மல்ல | 131 | 183 |
| திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம் | 228 | 412 |
| இலவச பாடப்புத்தகம் மற்றும் சீருடைகள் | 1,198 | 894 |
| பாடசாலை பருவச் சீட்டுக்கள் | 250 | 355 |
| சமய பாடசாலை பாடப்புத்தகங்களும் சீருடைகளும் | 39 | 31 |
| பாடசாலை போஷாக்கு உணவு | 582 | 586 |
| **விவசாயம்** | **14,944** | **17,489** |
| விவசாயக் கடன் வட்டி உதவுதொகை | 44 | 127 |
| உர மானியம் | 14,900 | 17,362 |
| **நலன்புரிக் கொடுப்பனவுகள்** | **9,421** | **10,246** |
| சமுர்த்தி நிவாரணம் | 4,330 | 3,143 |
| அங்கவீனமுற்ற படையினருக்கான உதவி | 3,451 | 3,773 |
| உலக உணவுத்திட்ட உதவி | 1,596 | 3,239 |
| வெள்ளம் மற்றும் வரட்சி நிவாரணம் | 44 | 91 |

*மூலம்: தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்*

- 2009 இல் குறை வருமானம் பெறும் விவசாயிகளுக்கு விசேடமாக உதவும் நோக்கத்துடன் சிறிய பற்று நில விவசாயிகளை இலக்காகக் கொண்ட உர மானியம் தொடர்ந்தும் வழங்கப்பட்டது. நெல் விவசாயிகள் 50 கி.கி கொண்ட பொதியொன்று ரூபா 350 என்ற மானிய விலையில் அனைத்து வகையான உரங்களையும் பெற்றுக் கொண்டனர்.

- பெருந்தோட்டத்துறை, 50 ஏக்கர்களைவிட குறைவான உரிமையாளர்கள் 50 கி.கி பொதியொன்று ரூபா 1,000 என்ற சலுகை அடிப்படையில் யூரியா உரத்தினை 2009 இலும் தொடாந்து பெற்றுக் கொண்டனர்.

## அரசாங்க முதலீட்டுச் செலவினம்

- துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் புதிதாக விடுவிக்கப் பட்ட பிரதேசங்களில் கிராமிய துறையினை இலக்காகக் கொண்டமை —கம நகும", —மக நகும", —உத்துரு வசந்தய" மற்றும் பிற வறுமைசார் வளர்ச்சி அபிவிருத்தி முன்னெடுப்புகள் என்பவற்றினை அதிக வளங்களுடன் அரசாங்கம் தொடர்ந்து மேற்கொண்டுள்ளது. பாதைகள் மற்றும் பாலங்கள், மின் உற்பத்தி, துறைமுகங்கள், நீர்ப்பாசனம், நீர் வளங்கள் மற்றும் மனித வள அபிவிருத்தி போன்ற தேசிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதுடன் 2009 இல் தொடர்ந்தும் பேணப்பட்டுள்ளது. 2009 ஜனவரி - ஏப்ரல் காலப்பகுதியின் போது ரூபா 85 பில்லியனாக மொத்த அரசாங்க முதலீடு காணப்பட்டுள்ளதுடன் 2008 ஆம் ஆண்டினைவிட இது 14 சதவீத அதிகரிப்பொன்றாகும்.

## கிராமிய அபிவிருத்தி முன்னெடுப்புகள்

- நாடாளவிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமான —மக நகும" மீதான செலவினம் 2009 மே மாத இறுதியளவில் ரூபா 1,335 மில்லியனாக இருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பல கிராமிய பாதைகள் கிராமிய அடைவுகளுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புனரமைக்கப்பட்டன. அத்துடன் பொருளாதார வளர்ச்சியும் துரித கதியில் அபிவிருத்தி செய்யப்படும். 2009 ஆம் ஆண்டின் போது ஏறக்குறைய 682 கி.மீ கிராமியப் பாதைகள் புனரமைக்கப்பட்டதுடன், 32,819 குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன. —மக நகும" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 6,600 கி.மீ கிராமிய பாதைகள் ரூபா 9,830 மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.13**
**மக நகும கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**
**2008 மே இறுதியிலுள்ளவாறு செயலாற்றுகை**

| மாவட்டம் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | பூரணப்படுத்தப்பட்ட மொத்தப் பாதை நீளம் (கி.மீ) | செலவினம் (ரூபா.மில்.) | நன்மையடையும் குடும்பங்கள் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 95.0 | 18.39 | 56.6 | 1,326.0 |
| கம்பஹா | 30.07 | 43.74 | 158.0 | 3,480.0 |
| களுத்துறை | 201.0 | 27.82 | 85.6 | 2,175.0 |
| கண்டி | 74.0 | 18.31 | 45.1 | 1,013.0 |
| மாத்தளை | 19.0 | 7.51 | 22.5 | 460.0 |
| நுவரெலியா | 19.0 | 4.91 | 18.0 | 224.0 |
| காலி | 2.07 | 8.75 | 32.2 | 411.0 |
| மாத்தறை | 108.0 | 24.07 | 87.4 | 1,416.0 |
| ஹம்பாந்தோட்டை | 397.0 | 73.36 | 309.6 | 5,194.0 |
| யாழ்ப்பாணம் | 4.0 | 3.55 | 6.5 | 160.0 |
| மன்னார் | 5.0 | 1.68 | 3.2 | 75.0 |
| வவுனியா | 9.0 | 6.03 | 6.4 | 263.0 |
| முல்லைத்தீவு | - | - | - | - |
| கிளிநொச்சி | - | - | - | - |
| மட்டக்களப்பு | 1.0 | 1.80 | 3.6 | 100.0 |
| அம்பாறை | 81.0 | 48.74 | 80.5 | 2,304.0 |
| திருகோணமலை | 6.0 | 3.27 | 7.2 | 187.0 |
| குருநாகல் | 219.0 | 163.74 | 150.3 | 5,686.0 |
| புத்தளம் | 39.0 | 15.05 | 49.1 | 827.0 |
| அநுராதபுரம் | 132.0 | 143.22 | 67.3 | 3,731.0 |
| பொலநறுவை | 11.0 | 9.84 | 13.2 | 250.0 |
| பதுளை | 23.0 | 5.50 | 19.1 | 284.0 |
| மொனறாகலை | 14.0 | 6.26 | 7.7 | 153.0 |
| இரத்தினபுரி | 212 | 31.6 | 65.9 | 2,064.0 |
| கேகாலை | 76.0 | 14.98 | 39.1 | 1,036.0 |
| **மொத்தம்** | **2,079.0** | **682.12** | **1,335.2** | **32,819.0** |

- கிராமிய பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கான பிரதான முன்னெடுப்பாக விளங்கும் —கம நகும” மூலம் பொருளாதார ரீதியில் வளர்ச்சியுற்ற கிராமங்கள் உருவாக்கப்பட்டன. அவ்வாறு உருவாக்கப்பட்ட கிராமங்கள் 2009 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 1,422 மில்லியன் செலவில் மேலும் விரிவாக்கப்பட்டது.

- —ஜாதிக சவிய” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயங்கரவாத நடவடிக்கைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் வாழும் மக்களை மீள்குடியேற்றல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக ரூபா 365 மில்லியன் நிதியுதவி வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக —நகனகிர நவோதய” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்காக ரூபா 100 பில்லியன் செலவிடப் பட்டுள்ளது.

- 2009 இல் ஆரம்பிக்கப்பட்ட புதிய முன்னெடுப்பான —உத்துரு வசந்தய” நிகழ்ச்சித்திட்டம் வட மாகாணத்தில் பயங்கரவாதத்தில் பிடியிலிருந்து மக்களின் வாழ்வாதாரத்தினை மீள் ஒழுங்குபடுத்துவதனை இலக்காகக் கொண்டுள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகளிலிருந்து வடக்கு மற்றும் கிழக்கு விடுவிக்கப்பட்டதன் பின்னர் 2009 இன் முதல் நான்கு மாதங்களின் போது இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு மீள்கட்டமைப்பினை துரிதமாக செயற்படுத்துவதற்கு ரூபா 2,550 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

**உள்நாட்டில் இடம்பெயந்தவர்களை மீள்குடியேற்றுதல்**

- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற செயற்பாடுகளுக்காக ரூபா 4,328 மில்லியன் செலவில் 2009 ஆம் ஆண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்கட்டமைப்பு கருத்திட்டத்திற்காகவும் பாதுகாப்பு நிவாரணம் மற்றும் மீள்கட்டுமாண நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்காக முறையே ரூபா 1,348 மில்லியன் மற்றும் 2,023 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**வவுனியா மாவட்டத்தில் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 2009 யூன் அன்றுள்ளவாறு**

| வலயம்/நிலையத்தின் பெயர் | குடும்பங்களின் எண்ணிக்கை | ஆண் | பெண் | ஆட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| ஆனந்தகுமாரசுவாமி கிராமம் - வலயம் 1 | 15,236 | 21,788 | 23,970 | 45,758 |
| பொன் இராமநாதர் கிராமம் -வலயம் 2 | 24,137 | 35,364 | 37,942 | 73,306 |
| அருணாச்சலம் கிராமம் - வலயம் 3 | 15,081 | 21,120 | 21,824 | 42,944 |
| அருணாச்சலம் கிராமம் - வலயம் 4 | 13,918 | 19,964 | 20,757 | 40,721 |
| வவுனியா மாவட்டத்திலுள்ள பிற நிலையங்கள் | 18,068 | 27,063 | 28,164 | 55,330 |
| **மொத்தம்** | **86,440** | **125,299** | **132,657** | **258,059** |

*மூலம் : மீள் குடியேற்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு*

- 2009 யூனில் உள்ளூரில் இடம்பெயர்ந்த 86,440 குடும்பங்கள் நலன்புரி முகாம்களில் வைக்கப்பட்டனர். 2009 முதல் நான்கு மாதங்களின் போது உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களுக்காக சமைத்த மற்றும் உலர் உணவு விநியோகத்திற்காக அரசாங்கம் ரூபா 1,012 மில்லியனை செலவிட்டுள்ளது.

**அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினம்**

**மனித வள அபிவிருத்தி**

**சுகாதாரம்**

- 2009 ஏப்ரல் இறுதியில் சுகாதாரம் மீதான செலவினம் சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறைகள் இரண்டினையும் உள்ளடக்கி ரூபா 11,725 மில்லியன் செலவிடப்பட்டது. அரசாங்க நிறுவனங்களுக்கு பாதுகாப்பானதும் பயன்மிக்கதுமான மருத்துவ வழங்கலினை பேணுவதற்கான 2009 ஏப்ரல் வரைக்கும் ரூபா 1,101 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

- குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிறுநீரகப் பிரிவு மற்றும் பிரசவ விடுதி, கண்டி பொது வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்கூடம், கொரிய நிதியுதவி வழங்கப்பட்ட மாத்தறை - கொடகம வைத்தியசாலைகள் போன்ற பல்வேறு வைத்தியசாலை அபிவிருத்தி கருத்திட்டங்களின் நிருமாணப் பணிகள் 2009 இன் போது வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளது. தேசிய வைத்தியசாலையில் நரம்பியற் பிரிவு சவுதி அராபிய உதவியுடன் நரம்பியல் நோய்களுக்கான வைத்திய வசதிகளை வழங்குவதற்கான அனைத்து

ஏற்பாடுகளையும் கொண்டு மிக அழகிய கட்டிடக்கலை அம்சத்துடன் மிக விரைவில் நிறைவு செய்யப்படவுள்ளது.

- மனித வள பகிர்வில் நிலவும் சமனற்ற நிலையினை போக்குவதற்காக சுகாதாரத்துறைக்கான ஆட்சேர்ப்புக்கள் 2009 இல் தொடர்ந்தும் இடம்பெற்றது. 681 பயிற்சிபெற்ற மருத்துவ அலுவலர்கள் 2009 மார்ச்சில் நியமிக்கப்பட்டனர். இதற்கு மேலதிகமாக, 2,363 தாதிமார் பயிற்சிகளை முடித்துக் கொண்டதுடன் 2009 இல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். அத்துடன் 19 மருத்துவச்சிகள் மற்றும் நான்கு ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் குறித்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களின் போது சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

**கல்வி**

- 2009 இன் முதல் நான்கு மாதங்களின் போது கல்விக்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 11,960 மில்லியனாகும்.
- பாடசாலை சிறுவர்களுக்காக வழங்கப்பட்ட கல்வி வசதிகளை மேம்படுத்தும் வகையில் 2009 ஆம் ஆண்டின் போது ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை கல்விக்காக மூலதன முதலீடாக ரூபா 34 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.
- 2009 இல் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியினை மேற்கொள்வதற்காக ரூபா 653 மில்லியன் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, குவைத், நெதர்லாந்து மற்றும் அவுஸ்திரியா என்பவற்றின் உதவியளிக்கப்பட்ட உயர்கல்வி அபிவிருத்திக் கருத்திட்டங்களில் ரூபா 856 மில்லியன் செலவிடப்பட்டது.

**உட்கட்டமைப்பு அபிவிருத்தி**

**பாதைகள்**

- 2009 ஏப்ரல் வரைக்கும் பாதைத்துறைக்கான முதலீடு ஏறக்குறைய ரூபா 18,000 மில்லியன்களாக இருந்தது. இந்த மொத்த முதலீடானது அதிவேக பாதை அபிவிருத்திக்கான ரூபா 6,542 மில்லியனை உள்ளடக்கியிருந்தது. இவற்றில் 2009 ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் போது தெற்கு அதிவேகப்பாதை அபிவிருத்திக்காக ரூபா 5,158 மில்லியன் செலவிடப்பட்டது. இதற்கு மேலதிகமாக நாடு முழுவதிலுள்ள பெருந்தெருக்களின் அபிவிருத்திக்காக ரூபா 3,968 மில்லியன் செலவிடப்பட்டு அதே வேளை பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் நிருமாணத்திற்காக ரூபா 1,689 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அத்துடன் 2009 ஆம் ஆண்டின் போது அனைத்து மாகாணங்களிலுள்ள

பாதைகளை விரிவாக்குவதற்கும் அவற்றினை மேம்படுத்துவதற்கும் ரூபா 1,788 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

**நீர் வழங்கலும் துப்பரவேற்பாடும்**

- 2009 இன் முதல் காலாண்டில் நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடு மீதான செலவினம் ரூபா 8,611 மில்லியனாக இருந்தது.

**நீர் வழங்கல், துப்பரவேற்பாட்டில் துறை ரீதியான செலவினம்**

**ரூபா.மில்.**

| செயற்படுத்தப்பட்ட திட்டம் | 2009 ஏப்ரல் வரை செலவினம் |
|---|---|
| பிரதான நகரங்களில் பாரியளவு நீர் வழங்கல் திட்டம் | 6,623 |
| சிறியளவு நீர் வழங்கல் திட்டம் | 302 |
| கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 567 |
| கழிவு நீரகற்றல் திட்டம் | 1,119 |

- இப்பணிகளுக்கு மேலதிகமாக, நீர்கொழும்பு, உன்னிச்சை, மட்டக்களப்பு, ஹம்பாந்தோட்டை, கண்டி, நுவரெலியா பிரதேசங்களில் நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதிகள் மற்றும் பல்வேறு இடங்களில் இடம் மாறல் மற்றும் பகிர்வு குழாய்கள் இக்காலப்பகுதியில் பொருத்தப்பட்டன.
- இரத்மலானை - மொறட்டுவை மற்றும் ஜா-எல - ஏக்கல பிரதேசங்களில் கழிவு நீரகற்றல் முறைமைக்கான நிர்மாணப்பணிகள் 2009 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளன.
- 506 கிராமசேவையாளர் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்ட கிராமிய நீர் வழங்கல் திட்டங்களில் 148 திட்டங்கள் 2009 இன் முதல் காலாண்டின் போது பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

**நீர்ப்பாசனம்**

- மாணிக்ககங்கை - வெஹரகல நீர்ப்பாசனக் கருத்திட்டம் தேசிய பூங்கா, பாதைகள் மற்றும் சிறிய குளங்கள் என்பவற்றின் மிகுதி அபிவிருத்திப் பணிகள் 2009 ஏப்ரல் வரை ரூபா 1,761 மில்லியன் செலவில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

- ஈரானிய உதவியுடன் உமா ஓயா திசைதிருப்பல் கருத்திட்டத்திற்கான நிதி வழங்கல் 2009 இல் 529 மில்லியன் ஐ.அ.டொலர் செலவினத்தில் பூரணப்படுத்தப்பட்டது. ரூபா 107 மில்லியன் ஒப்பந்தக் கொடுப்பனவு களுக்காக 2009 ஏப்ரல் வரை பயன்படுத்தப்பட்டுள்ள 5,000 ஹெக்டேயர் நிலத்தில் ஹம்பாந்தோட்டை மற்றும் மொனறாகலை மாவட்டங்களிலுள்ள 12,000 குடும்பங்கள் நன்மையடையும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- மொறகஹகந்த அணைக்கட்டு நிர்மாணம் உள்நாட்டு நிதியில் இடம்பெற்று வருகின்றது. வீதி வலயமைப்பு, மீள்குடியேற்றத்திற்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் காணி சுவீகரித்தல் என்பன 2009 இன் போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதே நேரம் மொறகஹகந்த மற்றும் களுகங்கை நீரேந்து நிலைகளின் பிரதான பணிகள் குவைத் மற்றும் சவுதி அராபிய உதவியுடன் 2009 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டமிடல் கருத்திட்டத்திற்கு உலக வங்கி உதவியாக 2009 இன் முதல் நான்கு மாதங்களின் போது ரூபா 3 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது 32 பாரிய அணைக்கட்டுக் களின் பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு திறனை உறுதிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் நவீன நீர் - காலநிலை தகவல் முறைமையொன்று தாபிக்கப்பட்டுள்ள அதே நேரம் நாட்டின் நீர் வளங்கள் திட்டமிடல் மேம்படுத்தப்பட்டுள்ளது.

## அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் - 2009

### காசு செயற்பாடுகள்

2009 மே மாத இறுதியளவில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு வெளிப்பாய்ச்சல் எதிர்வு கூறப்பட்ட பற்றாக்குறையான 5.4 பில்லியன் ரூபாவிற்கு எதிராக ரூபா 117.4 பில்லியன் தொகையாக இருந்தது. இந்த வித்தியாசத்திற்கு முக்கிய காரணம் வருமான பெறுகைகளின் வீழ்ச்சியாகும். 2009 இன் முதல் ஐந்து மாதங்களில் (ஜன - மே) முதலீட்டு செயற்பாடுகளுக்கு பின்னர் அரசாங்கத்தின் காசுச் செயற்பாடுகள் தேறிய காசுப் பற்றாக்குறையாக ரூபா 171.4 பில்லியனை சுட்டிக்காட்டியதுடன், 2008 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் போது நோக்குகையில் ரூபா 76.9 பில்லியனாக இருந்தது. முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசு வெளிப்பாய்ச்சலானது உண்மையான காசுப் பாய்ச்சல் மதிப்பீடுகளினைவிட 13.2 பில்லியன் ரூபாவினால் குறைவடைந்தது. படுகடன் மீதான மீள்கொடுப்பனவுகள், மதிப்பீடுகளிலிருந்து ரூபா 8.1 பில்லியனாக குறைவடைந்தமை மற்றும் ரூபா 171 பில்லியன் காசுப்பற்றாக் குறையினை நிவர்த்தி செய்வதற்காக மொத்தப் பெறுகைகள் என்பன உள்ளடங்கலாக தற்காலிக மேலதிகப்பற்றுக் கணக்கினை அதிகரிக்கச் செய்தது.

வங்கிகளுடன் செயற்பாட்டு மேலதிகப்பற்று மீதியினை முழு மொத்த நிறைவு மீதியுடன் ஒப்பிடுகையில் 2009 மே இறுதியில் வருடத்தின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 69.2 பில்லியனிலிருந்து ரூபா 77.0 பில்லியனாக அதிகரித்தது.

**அட்டவணை 1.14**

**அரசாங்க காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் பற்றிய கூற்று**
**2008 மற்றும் 2009 இன் முதல் ஐந்து மாதங்கள்**

| விடயம் | உண்மை ஜன - மே 2008 | 2009 ஜனவரி - மே | |
|---|---|---|---|
| | | உண்மை மதிப்பீடு | உண்மை காசுப்பாய்ச்சல் |
| வருமானத்திலிருந்து மொத்த காசு உட்பாய்ச்சல் | 261,521 | 342,014 | 228,130 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | (284,961) | (347,375) | (345,548) |
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்து தேறிய காசு | (23,440) | (5,361) | (117,418) |
| காசுப்பாய்ச்சல் முதலீட்டு செயற்பாடுகள் | (53,542) | (67,270) | (54,045) |
| தேறிய காசு மிகை(பற்றாக்குறை | (76,982) | (72,631) | (171,463) |
| ஆரம்ப காசு மீதி | (37,211) | (69,195) | (69,195) |
| மொத்த பெறுகைகள் | (170,743) | (324,012) | 400,938 |
| படுகடன் மீள்கொடுப்பனவு | (103,609) | (248,488) | (240,305) |
| தேறிய பெறுகைகள் | 67,134 | 75,524 | 160,633 |
| சீராக்கல் கணக்கு மீதி (ரீஈபீ, ஆர்எப்ஏ, | 2.907 | | 2,977 |

| | | | |
|---|---|---|---|
| வைப்புக்கள்) | | | |
| இறுதி மீதி | (44,152) | (54,908) | (77,048) |

*மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

# அத்தியாயம் 2

## பொருளாதாரம்

பொருளாதார வளர்ச்சியானது 2009 இன் முதல் காலாண்டில் நிலையான வளர்ச்சிப் போக்கினை காட்டியதுடன் வெளிவாரி மற்றும் உள்நாட்டு சூழ்நிலைகள் பாதகமாக காணப்பட்ட போதிலும் 1.5 சதவீத வளர்ச்சிப் போக்கொன்றை காட்டியதுடன் 2009 இன் பிற்பட்ட காலப்பகுதியில் விவசாயம் மற்றும் நிருமாணம் என்பவற்றுடன் வடக்கு கிழக்கில் பொருளாதார செயற்பாடுகளின் விளைவாக ஏற்பட்ட அபிவிருத்திகளுடன் வளர்ச்சி உயர்வடைந்தது. 2009 இன் முதல் காலாண்டில் செயலாற்றுகையானது சர்வதேச நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்திகளுக்கு காரணமாக இருந்ததுடன் மீளாய்வு காலத்தின் போது வளர்ச்சியடைந்த நாடுகளில் எதிர்மறையான வளர்ச்சி காணப்பட்டது. சிங்கபூர், மலேசியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது எதிர்மறை விளைவான முறையே 6.5 சதவீதம், 6.2 சதவீதம் மற்றும் 7.0 சதவீதம் என்பவற்றினை 2009 இன் முதல் காலாண்டின் போது பதிவாக்கியது. 2009 இன் முதல் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் 2008 காலப்பகுதியின் போது 6.2 சதவீதம் என்ற வளர்ச்சி விகிதம் காணப்பட்டது. விவசாயத்துறை 3.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த அதே வேளை கைத்தொழில் மற்றும் சேவைத்துறை முறையே 1.9 சதவீதம் மற்றும் 1.0 சதவீதத்தினால் ஆரோக்கியமான வளர்ச்சிப் போக்கொன்றினை காட்டியது.

பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிகூடிய பங்களிப்பானது 2008 இன் மீளாய்வு காலத்தின் போது 5.9 சதவீதமாக பதிவாகியிருந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. நெல், தெங்கு, பருவக்காலப் பயிர்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் என்பவற்றின் உற்பத்தி அதிகரித்ததுடன் மீன்பிடித்துறை உலகத்தில் நிலவிய உணவு பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்காக மேலதிக வளர்ச்சிப் போக்கினை சேர்த்துக் கொண்டது. தேயிலை போன்ற பிரதான ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் சிறு ஏற்றுமதி விவசாயத் தானியங்கள் என்பவற்றின் உற்பத்தி குறித்த காலத்தின் போது முறையே 40.9 சதவீதம் மற்றும் 5.3 சதவீதம் என்ற எதிர்மறை வளர்ச்சியினை பதிவாக்கியுள்ளது. 2008 இல் 83.5 மில்லியன் கி.கி களை பெற்றுக் கொண்ட தேயிலை உற்பத்தி 2009 இன் முதல் காலாண்டில் 48.4 மில்லியன் கி.கி களாக வீழ்ச்சியடைந்தது. இதற்கு காரணம் 16 சதவீதத்தினால் உர பாவனை வீழ்ச்சியடைந்ததுடன் வரட்சி நிலைமையின் தாக்கம் என்பவற்றினால் தேயிலை விலை குறைவடைந்து சர்வதேச கேள்வி பாதிக்கப்பட்டதாகும். மீளாய்வு காலத்தின் போது உயர், நடுத்தர மற்றும் கீழ்தர தேயிலை உற்பத்தியின் அனைத்து வகுதிகளும் முறையே 31.3 சதவீதம், 38.2 சதவீதம் மற்றும் 46.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. பல ஆண்டுகளாக இலங்கையின் தேயிலையினை கொள்வனவு செய்பவர்களாக இருந்த ரஷ்யா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் பொருளாதார நிலைமை பின்னடைந்ததினால் மீளாய்வு காலத்தில் இலங்கையின் தேயிலை வர்த்தகம் நேரடியாக பாதிக்கப்பட்டது. இதற்கு நேர்மாற்றமாக 2008 இன் முதல் காலாண்டில் 14.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் குறித்த காலப்பகுதியில் 2.7 சதவீதத்தினால் அதாவது 37.9 மில்லியன் கி.கி களாக இறப்பர் உற்பத்தி அதிகரித்தது. இறப்பர் துறை உலகப் பொருளாதார வீழ்ச்சியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு குறைவான கேள்வியின் காரணமாக 2008 ஜூனிலிருந்து குறிப்பிடத்தக்க விலை கழிப்பனவுக்கு உட்பட்டது. தெங்கு உற்பத்தி 29 சதவீதத்தினால் அதாவது 722.2 மில்லியன் தேங்காய்களாக காணப்பட்டதுடன் இது

முன்னைய ஆண்டின் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 3.6 சதவீத எதிர்மறை வளர்ச்சியினை காட்டியது. சாதகமான காலநிலை நிலவியமை மற்றும் தென் மாகாணத்தில் பரவிய –வெலிகமை வில்ட்” நோய் கட்டுப்படுத்தப்பட்டதும் இதற்கு சாதகமாக அமைந்தன.

2008/2009 பெரும்போகத்தின் போது 10.1 சதவீதமாக அதிகரித்ததுடன் 2.34 மில்லியன் மெட்றிக் தொன்களாக அல்லது 112 மில்லியன் புசல்களாக 2007/2008 பெரும்போகத்தின் போது விவசாயம் செய்யப்பட்ட பரப்பு 8.6 சதவீதத்தினால் அதிகரித்தது. சாதகமான காலநிலை நிலவியமை, தொடர்ந்தேர்ச்சியான உரமானியத்திட்டம் மற்றும் கிழக்கு மாகாணம் சாதாரண நிலைமைக்கு திரும்பியமை என்பன இந்த வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த பிரதான காரணிகளாகும்.

கறுவா, கராம்பு மற்றும் மிளகு என்பன அடங்கலாக சிறு ஏற்றுமதி விவசாய தானியத்துறை குறைந்த ஏற்றுமதி கேள்வி காணப்படுவதன் காரணமாக 2009 இன் முதல் காலாண்டின் போது 5.3 சதவீத எதிர்மறை வளர்ச்சியொன்றினை பதிவாக்கியது. கறுவா உற்பத்தி 15.5 சதவீதத்தினால் குறைவடைந்த அதே வேளை கராம்பு ஏற்றுமதி 84.7 சதவீதத்தினால் குறைவடைந்தது. மலைநாட்டு பயிர்கள், மரக்கறிகள் மற்றும் பழங்கள் போன்ற துணை துறைகள் தற்பொழுது 6.2 சதவீத சாதகமான வளர்ச்சியினை பதிவாக்கியுள்ளது. பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் சோளம் உற்பத்தி போன்ற உணவுப்பொருட்கள் மீளாய்வுக் காலப்பகுதியின் போது குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

**வரைபு 2.1**




மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி அதிகரிப்பு 2.9 சதவீதத்தினால் கால்நடைத்துறையில் வளர்ச்சியை ஏற்படுத்தியதுடன், குறித்த காலப்பகுதியின் போது கோழி உற்பத்தி சிறிதளவு வீழ்ச்சியினை பதிவாக்கியது. குறித்த காலப்பகுதியில் பால் உற்பத்தி 103 மில்லியன் லீட்டர்களை பதிவாக்கியதுடன் 2 சதவீத அதிகரிப்பினை காட்டியது. மீன்பிடி உபதுறை 2009 இன் முதல் காலாண்டில் ஆழ்கடல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தி முறையே 3.5 மற்றும் 28.9 சதவீதங்களினால் அதிகரித்தது.

2008 இல் 6.0 சதவீதத்தினை அடையப்பெற்ற கைத்தொழில்துறை 2009 இன் முதல் காலாண்டில் 1.9 சதவீதமாக சிறியதொரு அதிகரிப்பினை காட்டியது. சுரங்கமறுத்தல் மற்றும் கனிய அகழ்வு உபதுறை 4.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் மாணிக்கக்கற்கள் 50 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. தயாரிப்புத்துறை 2009 முதல் காலாண்டில் 2.7 சதவீத வளர்ச்சியொன்றினை காட்டியது. ஆடை மற்றும் துணி

கைத்தொழில் உலகப் பொருளாதார வீழ்ச்சி, தொடர்ந்தேர்ச்சியான போட்டித்தன்மை மற்றும் GSP+ திட்டத்தின் நிச்சயமற்ற தன்மை என்பவற்றுக்கு மாற்றமாக 2008 இல் காணப்பட்ட 2.5 சதவீதத்திற்கு எதிராக 5.4 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு பதனிடல் கைத்தொழில் 2009 இல் 12 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மின்சாரம், வாயு மற்றும் நீர்த்துறை பொருளாதார செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்தமை மற்றும் நீர் மின் உற்பத்தி 27.2 சதவீதத்தினால் குறைவடைந்ததன் காரணமாக உண்மையான காலப்பகுதியில் 2.5 சதவீதமாக காணப்பட்டன.

2009 இல் 3 சதவீத வளர்ச்சியினை பேணிய நிர்மாணக் கைத்தொழில் மேல் கொத்மலை நீர் மின் கருத்திட்டம், தெற்கு அதிவேகப் பாதை மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற அரசாங்க உட்கட்டமைப்பு கருத்திட்டங்களில் முதலீட்டு அதிகரிப்பு மற்றும் 31 கூட்டு ஆதனங்கள் நிர்மாணத்தில் தனியார் முதலீடுகள் என்பன இதற்கு காரணமாகும். எவ்வாறாயினும், உப துறைகளில் 2008 காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 8.6 சதவீத வளர்ச்சி விகிதத்தினை கொண்டிருந்தது. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை வகுதிகள் சிகரெட் விற்பனை மற்றும் மதுபான உற்பத்தியில் வீழ்ச்சி என்பவற்றினால் 4.7 சதவீதத்தினை சுட்டிக்காட்டியது.

வங்கித்தொழில், காப்புறுதி, தபால், தொலைத்தொடர்பு, போக்குவரத்து மற்றும் அரசாங்க தனியார் சேவைகளினால் பிரதானமாக அடையப்பட்ட மொ.உ.உ உற்பத்தியில் 55.3 சதவீத பங்களிப்பினை வழங்கிய சேவைத்துறை 2009 இன் முதல் காலாண்டில் 1.0 சதவீத வளர்ச்சியினை பதிவாக்கியது. எவ்வாறாயினும், இறக்குமதி மற்றும் வர்த்தகம், ஹோட்டல்கள் மற்றும் உணவு விடுதிகள், சரக்குப் பொருள் கையாளுகை, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து போன்ற உப துறைகள் உலகப் பொருளாதார நெருக்கடி காரணமாக எதிர்மறை வளர்ச்சியினை பதிவாக்கியது. குறித்த காலப்பகுதியில் கையாளப்பட்ட சரக்குப் பொருட்களின் மொத்த எண்ணிக்கை 12.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

தொலைத்தொடர்பாடல் துறையில் வளர்ச்சிப் போக்கானது 2009 இன் முதல் காலாண்டில் 10.1 சதவீத வளர்ச்சியினைப் பதிவாக்கி வீழ்ச்சியடைந்ததுடன் 2008 இன் மீளாய்வுக் காலத்தின் 22.5 சதவீத வளர்ச்சியினை பதிவாக்கியிருந்தது. தொலைத்தொடர்பாடல் துறையில் நிலையான வளர்ச்சி 2008 காலப்பகுதிக்கு எதிராக மீளாய்வு காலத்தின் போது நிலையான இணைப்புக்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளின் இணைப்புகள் முறையே 15 சதவீதம் மற்றும் 30 சதவீதமாக காணப்பட்டன. போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் உபதுறை 2008 இல் பதிவாகியிருந்த 9.4 சதவீதத்திற்கு எதிராக 3.9 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. குறித்த காலத்தில் வாகனங்களின் புதிய பதிவு 30.5 சதவீதத்தினால் அதிகரித்தது.

உலகப் பொருளாதார மற்றும் நிதி நெருக்கடி மூலம் 2009 இன் முதல் காலாண்டில் பல்வேறுபட்ட ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தகங்கள் வீழ்ச்சியடைந்தன. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகம் மீளாய்வு காலத்தின் போது முறையே 12.1 சதவீதமாகவும் 0.7 சதவீதமாகவும் எதிர்மறை வளர்ச்சியினை காட்டியது. மொத்த மற்றும் சில்லறை வியாபாரத்துறை 2009 இன் முதல் காலாண்டில் 2.5 சதவீத எதிர்மறை வளர்ச்சியொன்றினை பதிவாக்கியிருந்தது.

## அட்டவணை 2.1

**மொத்த உள்நாட்டு உற்பத்தி - துறை ரீதியான வகுதிகள் (2002) நிலையான விலைகள்**

**ரூபா.மில்.**

| | முதல் காலாண்டு | |
|---|---|---|
| | **2008** | **2009** |
| **விவசாயம், காடாக்கம் மற்றும் மீன்பிடி** | **78,959** | **81,299** |
| **விவசாயம், கால்நடை மற்றும் காடாக்கம்** | **72,526** | **74,481** |
| தேயிலை | 7,171 | 4,235 |
| இறப்பர் | 941 | 966 |
| தெங்கு | 6,933 | 7,979 |
| சிறு ஏற்றுமதி பயிர்கள் | 1,817 | 1,720 |
| அரிசி | 18,669 | 20,555 |
| மலைநாட்டு தானியங்கள் | 10,463 | 11,152 |
| பழங்கள் மற்றும் மரக்கறிகள் | 14,901 | 15,776 |
| கால்நடை | 4,286 | 4,412 |
| பிற விவசாயம் | 4,001 | 4,158 |
| விறகு மற்றும் காடாக்கம் | 3,344 | 3,527 |
| **மீன்பிடி** | **6,433** | **6,819** |
| **கைத்தொழில்** | **167,860** | **171,058** |
| **கனியம் மற்றும் சுரங்கமறுத்தல்** | **12,271** | **11,745** |
| **தயாரிப்பு** | **104,666** | **107,544** |
| பதனிடல் கைத்தொழில்கள் | 3,754 | 3,304 |
| தொழிற்சாலை கைத்தொழில் | 94,082 | 97,212 |
| சிறிய கைத்தொழில்கள் | 6,830 | 7,028 |
| **மின்சாரம், வாயு மற்றும் நீர்** | **12,506** | **12,200** |
| மின்சாரம் | 10,881 | 10,555 |
| வாயு | 1,019 | 1,028 |
| நீர் | 606 | 617 |
| **நிர்மாணம்** | **38,418** | **39,570** |
| **சேவைகள்** | **344,635** | **348,252** |
| **மொத்த மற்றும் சில்லறை விற்பனை** | **139,972** | **136,460** |
| இறக்குமதி வர்த்தகம் | 49,001 | 43,089 |
| ஏற்றுமதி வர்த்தகம் | 24,072 | 23,903 |
| உள்நாட்டு வர்த்தகம் | 66,899 | 69,468 |
| **ஹோட்டல்கள், உணவு விடுதிகள்** | **1,845** | **1,537** |
| **போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்** | **77,920** | **80,958** |
| போக்குவரத்து | 66,408 | 68,996 |
| சரக்கு கையாடல் - து.மு. வி.போக்குவரத்து | 3,509 | 3,154 |
| தபால் தொலைத்தொடர்பு | 8,003 | 8,808 |
| **வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் ரீல் எஸ்ரேட்** | **51,015** | **52,953** |
| **வதிவிட உரித்து** | **18,280** | **18,463** |
| **அரசாங்க சேவைகள்** | **41,523** | **43,179** |
| **தனியார் சேவைகள்** | **14,081** | **14,702** |

| | | |
|---|---|---|
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **591,454** | **600,610** |

*மூலம்: சனத்தொகை புள்ளிவிபரத் திணைக்களம்*

## பணவீக்கம்

2009 இன் முதல் 5 மாதங்களில் முழு மொத்த விலை அழுத்தம் மேலும் வீழ்ச்சியடைந்தது. உணவு மற்றும் சக்தி தொடர்பான பொருட்கள் பிரதானமாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் 2009 இன் முதல் காலாண்டில் குறைவடைந்ததன் விளைவாக 5 மாத காலத்தின் போது மாற்றப்படாத உள்நாட்டு விலை மறுசீரமைக்கப்பட்டதுடன் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் புள்ளிக்கு புள்ளி பணவீக்கம் அளவீடு செய்யப்பட்டதுடன் (2002 = 100) 2009 ஏப்பரலில் 2.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததுடன் 2004 இலிருந்து பணவீக்க மட்டம் 2004 இலிருந்து என்றுமில்லாதவாறு குறைவடைந்தது. எவ்வாறாயினும், இந்த விகிதம் 2009 மே மாதத்தில் 3.3 சதவீதமாக அதிகரித்ததுடன் உயர் சர்வதேச விலைகளில் விலைச்சீராக்கல் மேற்கொள்ளப்பட்டதுடன் சீனி மற்றும் பருப்புக்கான கட்டுப்பாட்டு விலை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டது.

**வரைபு 2.2**




முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தலைக்குரிய பணவீக்கம் குறைவாகக் காணப்பட்டதுடன், உணவு மற்றும் சக்தி தொடர்பான பொருட்களின் விலை வீழ்ச்சியடைந்தது என்ற வகையில் மானிய விலை அழுத்தம் காணப்பட்டது. சராசரி வருடாந்த பணவீக்க விகிதம் 2008 மே மாதத்தில் காணப்பட்ட 17.4 சதவீதத்தில் ஒப்பிடுகையில் 2009 மே மாதத்தில் 14.7 சதவீதமாக மேலும் வீழ்ச்சியடைந்தது. அதே போன்று உள்ளக பணவீக்கமும் பரந்த அடிப்படை விலை அழுத்தங்களை சுட்டிக் காட்டியதுடன் 2009 இன் முதல் காலாண்டின் போது வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், 2008 மே மாதத்தில் 9.6 சதவீதத்திலிருந்து 2009 மே மாதமளவில் 13.5 சதவீதமாக உள்ளக பணவீக்கம் காணப்பட்டது. பணவீக்க எதிர்பார்க்கை தொடர்ந்தும் சிறந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட பணவீக்க இலக்குக் கொள்கை முன்னெடுப்புகளினாலும் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கையினாலும் 2009 இல் குறைந்தளவு பணவீக்கம் எதிர்பார்க்கப்பட்டது.

### இலங்கையில் தலைப்பு பணவீக்கமும் பிரதான பணவீக்கமும்

| மாதம் | தலைக்குரிய பணவீக்கம் கொ.நு.வி.சு (புதியது) | பிரதான பணவீக்கம் |
|---|---|---|
| **2008** | | |
| ஜனவரி | 20.8 | 6.9 |
| பெப்ரவரி | 21.6 | 8.5 |
| மார்ச் | 23.8 | 9.3 |
| ஏப்ரல் | 25.0 | 9.3 |
| மே | 26.2 | 9.6 |
| யூன் | 28.2 | 14.1 |
| யூலை | 26.6 | 17.2 |
| ஓகஸ்ட் | 24.9 | 17.4 |
| செப்டம்பர் | 24.3 | 18.7 |
| ஒக்டோபர் | 20.2 | 18.1 |
| நவம்பர் | 16.3 | 18.1 |
| டிசம்பர் | 14.4 | 15.7 |
| **2009** | | |
| ஜனவரி | 10.7 | 15.5 |
| பெப்ரவரி | 7.6 | 14.8 |
| மார்ச் | 5.3 | 14.2 |
| ஏப்ரல் | 2.9 | 13.5 |
| மே | 3.3 | 13.5 |

### வேலையின்மை

2003 - 2009 ஆம் ஆண்டுகளில் வருடாந்த வேலையின்மை விகிதத்தினை பொறுத்த வரையில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு அவதானிக்கப்பட்டுள்ளது. 2009 இன் முதல் காலாண்டின் போது தொழில்சந்தை நிலைமை மெது மெதுவாக சீரடைந்துள்ளது. இலங்கை ஊழியப்படை பற்றிய ஆய்வின்படி வேலையின்மை விகிதமானது (வடக்கு கிழக்கு நீங்கலாக) 2008 இன் அதே காலப்பகுதியில் காணப்பட்ட 5.1 சதவீதத்திலிருந்து 2009 இன் மீளாய்வு காலப்பகுதியில் 5.3 சதவீதமாக அதிகரித்துள்ளது.

வரைபு 2.3




2009 இன் முதல் காலாண்டில் ஏறக்குறைய 7.7 மில்லியன் இலங்கையர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். விவசாயம் மற்றும் கைத்தொழில்துறைகள் முறையே 34 மற்றும் 25 சதவீதங்களை காட்டியுள்ளதுடன் சேவைத்துறையானது மொத்த வேலைவாய்ப்பு பெற்ற சனத்தொகையில் 42 சதவீதமாகும்.

## வெளிவாரித்துறை அபிவிருத்தி

### ஏற்றுமதிகள்

2009 இன் முதல் காலாண்டில் நாட்டின் ஏற்றுமதி செயலாற்றுகையினை உலகப் பொருளாதார வீழ்ச்சி கடுமையாக பாதித்தது. 2009 இன் முதல் காலாண்டில் ஏற்றுமதி வர்த்தகத்தின் வர்த்தக இலாப பெறுமதி 0.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2009 இன் முதல் 4 மாதங்களின் போது ஏற்றுமதி வருமானங்கள் 16.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் 2,085 ஐ.அ.டொலர்களாக காணப்பட்டது. மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 22 சதவீதமானவை விவசாய ஏற்றுமதிகளாகவும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட கேள்வி குறைவடைந்தது. எவ்வாறாயினும், தேயிலை, இறப்பர் மற்றும் தேங்காய் என்பவற்றின் ஏற்றுமதிப் பெறுமதி 2008 ஆம் ஆண்டில் இதே காலப்பகுதியின் போது இருந்ததினைவிட முறையே 8.2, 46.9 மற்றும் 312.9 சதவீதத்தினால் அதிகரித்தது. அதே நேரம் கி.கி ஒன்றுக்கான ஐ.அ.டொலர் பெறுமதி இப் பொருட்கள் தொடர்பில் 2009 ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் போது முறையே 5.9, 43.2 மற்றும் 39 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு காரணம் நெருக்கடி நிலைக்கு முன்னர் காணப்பட்ட விலை குமிழிகள் வெடிப்படைந்ததேயாகும். இந்த அபிவிருத்திகளுடன் நோக்குகையில் தேயிலை மற்றும் இறப்பருக்கான கொழும்பு ஏல விற்பனை விலைகள் முறையே 1.3 மற்றும் 48.3 சதவீதங்களாக வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், கடந்த வருடத்தினைவிட தற்பொழுது காணப்படும் விலைகள் வித்தியாசமாக அமைவதுடன், 2009 ஏப்ரலில் கி.கி ஒன்று 4.00 ஐ.அ.டொலர்களாக தேயிலை விலைகள் காணப்பட்டது. தேங்காய் ஏற்றுமதிகளிலிருந்து வருமானம் 44 சதவீதத்தினால் அதிகரித்த அதே வேளை துருவல் தேங்காய் வருமானம் 88 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் 2009 ஏப்ரலில் 43.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. சிறிய விவசாய உற்பத்திகளின் ஏற்றுமதி வருமானம் 2009 இல் முதல் நான்கு

மாதங்களில் 29.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் அதற்கான தொகை 64 மில்லியன் ஐ.அ.டொலர்களாகும்.

கைத்தொழில் ஏற்றுமதி வருமானம் 2008 இல் பதிவாகியிருந்த 1,850 மில்லியன் ஐ.அ.டொலர்களுடன் ஒப்பிடுகையில் 1,612 மில்லியன் ஐ.அ.டொலர்களாக காணப்பட்டது. இது 12.9 சதவீத வீழ்ச்சியாகும். கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கிடையில் ஆடை மற்றும் துணிகளிலிருந்து வருமானம் குறித்த காலத்தின் முதல் நான்கு மாதங்களில் 1,053 மில்லியன் ஐ.அ.டொலர்களாக அதிகரித்திருந்தது. இது 2 சதவீத அதிகரிப்பாகும். தோற்பொருள், பாதணி மற்றும் சுற்றுலாப் பொருட்கள் போன்ற உப துறைகள் 2009 இல் முதல் 4 மாதக்காலப் பகுதியில் 23 சதவீத வளர்ச்சியொன்றினை காட்டியது. கனிய ஏற்றுமதிகள் 2009 ஜனவரி முதல் ஏப்ரல் வரை 50.6 சதவீத வளர்ச்சியினை அதாவது 23.6 மில்லியன் ஐ.அ.டொலர்களை கொண்டிருந்தது. உணவு குடிபானங்கள், புகையிலை மற்றும் இறப்பர் உற்பத்திகளின் உபதுறை முறையே 15 மற்றும் 41 சதவீதங்களை உள்ளடக்கியிருந்தது.

**இறக்குமதிகள்**

மீளாய்வு காலாண்டின் போது அனைத்து பிரதான உணவுப்பொருட்களும் எதிர்மறையான வளர்ச்சியினை பிரதிபலித்தன. பிரதான உணவுப்பொருட்கள் மீதான குறைந்த இறக்குமதி விலைகளுக்கு மாற்றமாக இறக்குமதிகள் மீதான செலவினங்கள் 2009 ஏப்ரல் இறுதியில் 36.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் அதிகரித்த கேள்வி காரணமாக 2,891 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக் கொண்டதுடன் பொருளாதாரத் துறைச் செயற்பாடுகள் சர்வதேச பொருளாதார பிரச்சினையுடன் ஒருங்கிணைந்ததாகும். சீனி, கோதுமை மா, பால் உற்பத்திப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதிகள் மீது உரப்பட்ட குறைந்த செலவினம் காரணமாக நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினம் 32.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. சர்வதேச சந்தையில் சீனியின் விலை அதிகரித்ததுடன் 2009 ஏப்ரல் மாதத்தில் சீனி இறக்குமதி மீதான விலை 16.3 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு மேலதிகமாக மோட்டார் வாகனங்கள் மற்றும் மின்சாரப் பொருட்களின் இறக்குமதியானது முறையே 72 மற்றும் 61 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

2008 இன் முதல் 4 மாதங்களில் 3,440 மில்லியன் ஐ.அ.டொலர்களுடன் ஒப்பிடுகையில் பெற்றோலியம் அல்லாத இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 2,406 மில்லியன் ஐ.அ.டொலர்களாகும். இடைநிலைப் பொருட்கள் மீதான மொத்த செலவினம் குறைந்த பெற்றோலிய மற்றும் உர இறக்குமதிகளினால் 1,446 மில்லியன் ஐ.அ.டொலர்களாக 44.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. குறித்த காலப்பகுதியின் போது 485 மில்லியன் ஐ.அ.டொலர்களாக 57 சதவீதத்தினால் பெற்றோலிய இறக்குமதி காணப்பட்ட அதே வேளை உர இறக்குமதிகள் 75 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. மசகு எண்ணெயில் சராசரி இறக்குமதி விலையானது 2009 ஏப்ரலில் பீப்பாய் ஒன்று 43 ஐ.அ.டொலர்களிலிருந்து 50 ஐ.அ.டொலர்களாக அதிகரித்தது. 2009 இன் எஞ்சிய காலப்பகுதியின் போது மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு உயர் எதிர்பார்க்கையுடன் காணப்பட்டது. அதிக கேள்வி காரணமாக ஆடை மற்றும் இரத்தினக்கல் ஏற்றுமதிகள் 18 சதவீதம் மற்றும் 43 சதவீதமாக அதிகரித்தது. பொருளாதார வளர்ச்சி தாமதடைந்தன் காரணமாக முதலீட்டுப் பொருட்கள் 781 மில்லியன் ஐ.அ.டொலர்களாக 23 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**வர்த்தகப் பற்றாக்குறை**

ஏற்றுமதிகளில் இருந்து வருமானம் மற்றும் இறக்குமதிகள் மீதான செலவினம் இரண்டினதும் வீழ்ச்சி காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான குறைந்த

கேள்வி மற்றும் குறைந்த இறக்குமதி விலைகள், ஒருங்கிணைந்த வர்த்தகப் பற்றாக்குறை 2008 இன் மீளாய்வு காலப்பகுதியில் 2,091 மில்லியன் ஐ.அ.டொலர்களாக இருந்ததுடன் 2009 இன் ஜனவரி - ஏப்ரல் காலப்பகுதியில் 806 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதாவது 61.5 சதவீதத்தினால் வர்த்தகப் பற்றாக்குறை ஏற்பட்டது.

**தனியார் பெறுகைகள்**

வங்கி முறைமைகளின் ஊடாக பிரதானமாக அதிகரித்த மாற்றல்கள், தனியார் பெறுகைகள் 2008 இன் பகுப்பாய்வுக் காலத்தின் போதான 1,047 மில்லியன் ஐ.அ.டொலர்களுடன் ஒப்பிடுகையில் வர்த்தகப் பற்றாக்குறை மேலதிகமாக 2009 இன் 4 மாத காலப்பகுதியில் 1,034 மில்லியன் ஐ.அ.டொலர்களை பெற்றிருந்தது. இக்காலப்பகுதியின் போது தனியார் பெறுகைகள் ஏறக்குறை 28 சதவீதமாகும். (228 மில்லியன் ஐ.அ.டொலர் மிகையாகும்)

**அட்டவணை 2.2**

| **வகுதி** | **ஜன-ஏப் 2008 ஒருங்கிணைந்த (ஐ.அ.டொ.மில்.)** | **ஜன-ஏப் 2009 ஒருங்கிணைந்த (ஐ.அ.டொ.மில்.)** |
|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **2,488** | **2,085** |
| **வெளிநாட்டு வர்த்தகம்** | | |
| விவசாயம் | 590 | 450 |
| தேயிலை | 411 | 300 |
| பிற | 179 | 149 |
| கைத்தொழில் | 1,850 | 1,612 |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 141 | 119 |
| ஆடை மற்றும் புடவைகள் | 1,033 | 1,053 |
| இறப்பர் உற்பத்திகள் | 176 | 104 |
| இரத்தினக்கல் மற்றும் ஆபரணம் | 113 | 80 |
| பிற | 387 | 256 |
| கனியம் | 48 | 24 |
| வகுப்பாக்கப்படாதவை | 0 | 0 |
| **இறக்குமதிகள்** | **4,579** | **2,891** |
| நுகர்வுப் பொருட்கள் | 913 | 621 |
| உணவு, குடிபானம் | 554 | 406 |
| பிற நுகர்வுப் பொருட்கள் | 359 | 214 |
| மோட்டார் கார்,சைக்கிள்கள் | 152 | 43 |
| இடைநிலைப் பொருட்கள் | 2,621 | 1,446 |
| பெற்றோலியம் | 1,140 | 485 |
| உரம் | 123 | 31 |
| இரசாயனங்கள் | 115 | 86 |
| புடவை, துணிகள் | 532 | 435 |
| இரத்தினக்கற்கள் | 104 | 59 |
| பிற இடைநிலைப் பொருட்கள் | 609 | 350 |
| முதலீட்டுப் பொருட்கள் | 1,013 | 781 |
| இயந்திரங்கள், உபகரணங்கள் | 467 | 32 |
| போக்குவரத்து உபகரணங்கள் | 139 | 124 |
| கட்டிடப் பொருட்கள் | 297 | 249 |
| பிற முதலீட்டுப் பொருட்கள் | 110 | 84 |
| வகுப்பாக்கப்படாதவை | 31 | 44 |
| **வர்த்தக மீதி** | **-2,091** | **-806** |

*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

**மொத்த மீதியும் உத்தியோகபூர்வ ஒதுக்கமும்**

ஆசிய நிதியத்தினால் வழங்கப்பட்ட 1,471 மில்லியன் ஐ.அ.டொலர்கள் மற்றும் 1,296 மில்லியன் ஐ.அ.டொலர்கள் உத்தியோகபூர்வ ஒதுக்குகள் 2009 ஏப்ரல் அளவில் காணப்பட்டது. இவை 165 மில்லியன் ஐ.அ.டொலர் வைப்புக்களுடன் இரண்டு உள்நாட்டு வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டன. சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் சாத்தியமான மட்டமொன்றில் உத்தியோகபூர்வ ஒதுக்குகளை செயற்படுத்துவது 367 மில்லியன் ஐ.அ.டொலர்களாக 2009 யூன் 19 ஆம் திகதி வரைக்கும் பெறப்பட்டது. இதற்கு மேலதிகமாக 66 மில்லியன் ஐ.அ.டொலர் மொத்த ஒதுக்குகள் இலங்கை அபிவிருத்தி முறிகளை குறித்த காலப்பகுதியின் போது வழங்கியதன் மூலம் பெறப்பட்டது. இது மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மற்றும் தெரிவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட வைப்புத் தேவைப்பாடுகள் அத்துடன் விற்பனை மற்றும் வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகள் மீது விதிக்கப்பட்டிருந்த வரையறைகள் நீக்கப்படுவதற்கு காரணமாக அமைந்தது. இது வெளிநாட்டு செலாவணிச் சந்தையினை ஸ்திரப்படுத்துவதற்கு உதவுவதுடன் நாட்டுக்குள் அதிகமான காசுப்பாய்ச்சலுக்கான காரணமாக அமைகின்றது.

**நிதித்துறை அபிவிருத்தி**

பணவீக்கத்தில் அதிக வீழ்ச்சி மற்றும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தியுடன் கூடிய உள்நாட்டு கேள்வி அதிகரிப்பு, சாதாரண வெளிநாட்டு செலாவணியில் நெகிழ்வுப் போக்கு, இலங்கை மத்திய வங்கி அதனது நாணயக்கொள்கையினை நிலையாக வைத்திருத்தமை என்பவற்றுடன் பணவீக்க எதிர்பார்ப்பு சந்தையில் திரவத்தன்மையினை அதிகரிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த வகையில் இலங்கை மத்திய வங்கியின் வட்டி விகிதக்கொள்கை நாட்டின் பொருளாதார செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக வேண்டி 2009 யூன் மாதத்தில் ஒவ்வொரு புள்ளிக்கும் 50 என்ற அடிப்படையில் மேலும் குறைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இலங்கை மத்தியவங்கி மீள் கொள்வனவு விகிதத்தினை 11.50 சதவீதத்திலிருந்து 8.50 சதவீதமாக குறைத்ததுடன் 2009 யூன் மாதமளவில் 12 சதவீதத்திலிருந்து 11.00 சதவீதத்திற்கு ஒதுக்கு மீள் கொள்வனவு விகிதம் குறைக்கப்பட்டது. மத்திய வங்கியின் கொள்கை விகித குறைப்பனவு உள்நாட்டு கடன் சந்தையில் சுதந்திர தன்மைக்கு உதவியதுடன் மேலும் அதிகரித்த கடன் பாய்ச்சலின் சந்தை வட்டி விகிதத்தினை குறைவடையச் செய்தது.

2009 மே மாதமளவில் இந்த அளவைகள் விரிந்த பண வழங்கலை ($M_{2b}$) 10.3 சதவீதம் வரைக்கும் குறைவடைவதற்கு காரணமாகியது.

2009 இன் முதல் காலாண்டில் பங்குச்சந்தை செயற்பாடுகள் வரலாற்றில் அனைத்து பங்கு விலைச்சுட்டி (ASPI) இனால் பதிவு செய்யப்பட்ட உயர் தினசரி சதவீத வளர்ச்சியினை எதிர்பாராத செயலாற்றுகையொன்றாக பதிவாக்கியிருந்தது. அனைத்து பங்கு விலைச்சுட்டி ஐ.அ.டொலர் நியதிகளில் சர்வதேச சுட்டியாக செயற்படும் வகையில் குறித்த வருடத்திற்கு 16.3 சதவீத வளர்ச்சியொன்றினை பதிவாக்கியிருந்தது.

2009 ஜனவரி - மே காலப்பகுதியில் தினசரி புரள்வு 82 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டதுடன் 2009 மே மாதத்தில் ரூபா 751 மில்லியன் பெறப்பட்ட அதே நேரம் மிலங்கா மற்றும் அனைத்து பங்கு விலைச்சுட்டி என்பன முறையே 18 மற்றும் 16 சதவீதங்களினால் அதிகரித்தன. இவை நாட்டிற்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டினை

ஊக்குவித்ததுடன் கொழும்பு பங்குச்சந்தையில் முதலிடுவதற்காக பல உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களையும் இது ஊக்குவித்தது.

# அத்தியாயம் 3

## வெளிநாட்டு உதவி

2009 ஜனவரியிலிருந்து மே மாத இறுதி வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு கடன் வழங்குநரினாலும் நன்கொடை முகவராண்மைகளினாலும் வழங்கப்பட்ட மொத்த உதவித்தொகை 147.73 மில்லியன் ஐ.அ.டொலர்களாகும். இதில் கருத்திட்டக் கடன்கள் 110.43 மில்லியன் ஐ.அ.டொலருக்கு வகைகூறியதோடு மானியங்கள் 37.30 மில்லியன் ஐ.அ.டொலர்களாக காணப்பட்டன.

**அட்டவணை 3.1**

**உதவி வழங்கல்கள் (ஜன - மே 2009)**

| கொடை வழங்குனர் | ஐ.அ.டொலர் மில். |
|---|---|
| ஜப்பான் | 9.74 |
| குவைத் | 34.09 |
| கொரியா | 76.34 |
| உ.உ.திட்டம் | 2.26 |
| ஐ.நாஅபி.நிகழ்ச்சித்திட்டம் | 25.30 |
| **மொத்தம்** | **147.73** |

*மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

**வரைபு 3.1**

**உதவி அளிப்புக்கள் (வீதாசார ரீதியாக)**


ஐப்பான்
7%
குவைத்
23%
கொரியா
51%
உ உ திட்
2%
ஐ.நா.அபி.நி.தி
17%

**அட்டவணை 3.2**

**2009.01.01 இலிருந்து 2009.05.31 வரை உதவி அளிப்புக்கள்**

| துறை | கொடை வழங்குநர் | கருத்திட்டப் பெயர் | கடன் | மானியம் |
|---|---|---|---|---|
| விவசாயம் | ஜப்பான் | வசதி குறைந்த விவசாயிகளுக்கான உணவுப் பாதுகாப்பு கருத்திட்டம் - 2008 | | 5.42 |
| | உ.உ. திட்டம் | உள்நாட்டில் இடம் பெயந்தவர்களுக்கான ஒத்துழைப்பு அவசர விவசாய உதவி | | 0.36 |
| நீர்ப்பாசனம் | குவைத் | களு கங்கை அபிவிருத்தி கருத்திட்டம் | 34.09 | |
| சுகாதாரமும் சமூக நலன்புரியும் | ஜப்பான் | அநுராதபுர போதனா வைத்தியசாலை மேம்பாடு (கட்டம் II) | | 4.33 |
| | ஐ.நா.அபி. நிகழ்ச்சித் திட்டம் | பெருந்தோட்ட சமுதாயத்தின் சமூக அபிவிருத்தி | | 0.10 |
| நீர் வழங்கல் | கொரியா | றுகுனுபுர நீர்வழங்கல் அபிவிருத்தி கருத்திட்டம் | 76.34 | |
| மீன்பிடி | உ.உ. திட்டம் | தெற்கு மற்றும் தென்கிழக்காசியாவிற்கான பிராந்திய மீன்பிடி வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டம் | | 1.90 |
| நீதித்துறை | ஐ.நா.அபி. நிகழ்ச்சித் திட்டம் | ஒத்துழைப்பு முயற்சிகளும் ஊழல்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் | | 0.30 |
| | ஐ.நா.அபி. நிகழ்ச்சித் ்ட்டம் | நீதியை சமமாக அடைந்து கொள்ளல் கட்டம் II | | 7.74 |
| சுற்றாடல் | ஐ.நா.அபி. நிகழ்ச்சித் திட்டம் | தென் - மேல் மலைக் காடுகளில் பல்வகைத் தன்மை பாதுகாப்பு | | 0.22 |
| முகாமைத்துவமும் நிறுவன அபிவிருத்தியும் | ஐ.நா.அபி. நிகழ்ச்சித் திட்டம் | தெற்கு - தெற்கு ஒத்துழைப்பின் ஊடாக திறன்விருத்தி | | 0.13 |
| கால்நடை அபிவிருத்தி | ஐ.நா.அபி. நிகழ்ச்சித் திட்டம் | இடைமாறல் அறவீட்டு நிகழ்ச்சித்திட்டம் | | 16.80 |
| **மொத்தம்** | | | **110.43** | **37.30** |

**அளிப்புச் செய்யப்பட்டு செலவிடப்படாத மீதிகள்**

2009 மே இறுதியிலுள்ளவாறு அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வெளிநாட்டு நிதியளிப்பு பயன்படுத்தப்படாத மொத்த மீதி 5.36 பில்லியன் ஐ.அ.டொலர்களாக இருந்தது. இந்த அளிப்புக்களுக்கான கருத்திட்ட செயற்படுத்துகை காலம் 2 -5 வருட காலப்பகுதிக்குள் இருந்ததுடன் அதன் பயன்பாடும் இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். அட்டவணை 3.3 உதவி அளிப்புச் செய்யப்பட்டு பயன்படுத்தப்படாத மீதிகளை துறைரீதியில் சுட்டிக்காட்டுக்கின்றது.

**அட்டவணை 3.3**
**2009 மே 31 அன்றுள்ளவாறு உதவி அளிப்புச் செய்யப்பட்டு செலவிடப்படாத மீதி (துறைரீதியாக)**

| துறை | ஐ.அ.டொ. மில் | மொத்தம் % |
|---|---|---|
| பாதை, போக்குவரத்து | 1162.8 | 21.7 |
| துறைமுகம் | 740.8 | 13.8 |
| நீர் வழங்கலும் துப்பரவேற்பாடும் | 568.1 | 10.6 |
| சுனாமி புனரமைப்பு | 317.2 | 5.9 |
| சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி | 333.7 | 6.2 |
| வலு மற்றும் சக்தி | 708.4 | 13.2 |
| தனியார்துறை அபிவிருத்தி | 100.8 | 1.9 |
| விவசாயம், மீன்பிடி மற்றும் நீர்பாசனம் | 783.2 | 14.6 |
| பிணக்குகளினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்பு | 83.9 | 1.6 |
| கிராமிய அபிவிருத்தி | 73.2 | 1.4 |
| சுற்றாடலும் இயற்கை வளங்களும் | 54.2 | 1.0 |
| தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் | 43.2 | 0.8 |
| வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி | 58.9 | 1.1 |
| பிற | 330.2 | 6.2 |
| **மொத்தம்** | **5,358.6** | |

*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

## வெளிநாட்டு நிதி பகிர்வுகள்

2009 மே இறுதியில் மொத்த வெளிநாட்டு நிதியளிப்புகள் 402.94 மில்லியன் ஐ.அ.டொலர்களாக இருந்தது. மொத்த அளிப்புகளின் கருத்திட்டக் கடன்கள் 316.40 மில்லியன் ஐ.அ.டொலராக இருந்ததுடன் மானியங்கள் 86.54 மில்லியன் ஐ.அ.டொலர்களாக இருந்தன.

அட்டவணை 3.4

வெளிநாட்டு உதவி பகிர்வுகள் - ஐ.அ.டொ. மில்லியன்

| கொடைவழங்குநர் | கடன் | மானியம் | மொத்தம் |
|---|---|---|---|
| ஜப்பான் | 110.36 | 0.57 | 110.93 |
| ஒஸ்ரியா | 8.23 | | 8.23 |
| சீனா | 6.40 | | 6.40 |
| டென்மார்க் | 13.61 | | 13.61 |
| இந்தியா | 28.34 | | 28.34 |
| நெதர்லாந்து | 10.35 | 49.45 | 59.80 |
| ஸ்பையின் | 8.98 | | 8.98 |
| சவுதி நிதியம் | 3.17 | | 3.17 |
| ஐக்கிய இராச்சியம் | 32.36 | | 32.36 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 64.95 | 3.12 | 68.07 |
| ஐரோப்பிய சமூகம் | | 9.55 | 9.55 |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கி | 6.61 | | 6.61 |
| உலக வங்கி | 14.37 | 20.53 | 34.9 |
| ஐ.நா. முகவர்கள் | 0.65 | 2.23 | 2.88 |
| பிற | 8.02 | 1.09 | 9.11 |
| மொத்தம் | **316.40** | **86.54** | **402.94** |

*மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

**வரைபு 3.2**

**கொடை வழங்குநர் ரீதியில் வெளிநாட்டு உதவி பகிர்வு**




**வெளிநாட்டு படுகடன்**

- 2009 மே இறுதியளவில் அரசாங்கத்தின் மொத்த வெளிநாட்டு படுகடன் 12.06 பில்லியன் ஐ.அ.டொலர்களாக இருந்தது. இது 2008 இன் இறுதியில் காணப்பட்ட படுகடன் இருப்புடன் ஒப்பிடும் போது 250 மில்லியன் ஐ.அ.டொலர் வீழ்ச்சியொன்றாகும்.

- 2009 மே 31 ஆம் திகதி வரையான மொத்த படுகடன் சேவைக் கொடுப்பனவு 223.4 மில்லியன் ஐ.அ.டொலர்களாக இருந்தது. இதில் 145.7 மில்லியன் ஐ.அ.டொலர் பிரதான கொடுப்பனவாகவும் மிகுதி 77.7 மில்லியன் ஐ.அ.டொலர் வட்டிக் கொடுப்பனவாகவும் இருந்தது. 2009 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட மொத்த படுகடன் சேவைக் கொடுப்பனவு 900 மில்லின் ஐ.அ.டொலர்களாக இருந்ததுடன் அதில் 24.8 சதவீதம் 2009 மே 31 ஆம் திகதியளவில் ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கிறது.